ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ. 3—0
6-மாத சந்தா ,,	— ,, 1-12
வெளிநாட்டிற்கு ,,	— ,, 4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஐப்பசி௴ 30௳ (15—11—1931) | மலர் 29

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4   12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து
கைகண்ட கெந்தகரசாயனம்.
(மாத்திரைரூபமாய, வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முறிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத் தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிரந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினாலோ, தளர்ச்செய்துக் கொண்டதினாலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊசிருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்துகட்டு என்பதற்கும் தொடையின் இரத்த நரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முறுக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம்
ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,
(கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்
200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இன்சின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இன்சின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலைன் மோட்டார்களிலும், 30 வருஷ அனுபவமுள்ள
ரா. கன்னியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அனுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் ஏற்படும் தவறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இது வரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நுட்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இஞ்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-
குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய
மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.
என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)
கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

சுயமரியாதைப் பொக்கிஷம்
எனும்
புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அன்னவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

தாதுபுஷ்டிக்கு
பழநி சி. எம். சாமி,
மன்மத குளிகை
யை உபயோகியுங்கள்.



நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.
புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி
குருதாம்பர பஸ்பம்
சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.
ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மஹாலயப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி 'S. I'

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பத்திரிகைகள் உண்மைகளை நியாயத்தோடு எழுதுவதே உலகத்திற்குபகாரம்.

(கைவல்யம்)

திரு. காந்தியின் அபிப்பிராயத்திற்கு திரு. அம்பேத்கார், திரு. சீனிவாசன் இவர்கள் ஒத்து வாராததினால் இவர்களைத் தேசியப் பத்திரிகைகள் குற்றம் சொல்லுகின்றன. அவர்கள் பேரில் ஜனசமூகம் கெட்ட எண்ணம் கொள்ளக் குற்றங்கள் பொதுப்படையாக, தப்பான பதத்தில், சொல்லப் படுகிறதேயல்லாமல், அவர்கள் செய்ததும், செய்வதுமான குற்றங்களை விபரமாகச் சொன்னாலன்றோ உண்மைவிளங்கும்; அது பத்திரிகைத் தொழிலின் தன்மையுமாகும்.

திரு. காந்தி, அவர்களும் திரு. அம்பேத்கார், திரு சீனிவாசன் இவர்களும் வட்ட மேஜை மகாநாட்டில் வித்தியாசப்படக் காரணமாகவிருந்த விபகார விஷயங்களை "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் அம்பேத்கார், திரு. சீனிவாசன் இவர்கள் விபரமாக எழுதி யிருக்கிறார்கள். அதை தேசியப் பத்திரிகைகள் பிரசுரிக்க வில்லை. "சண்டமாருதப்" பத்திரிகை மாத்திரம் பிரசுரித்திருக்கிறது. அவர்கள் எழுதியிருப்பது உண்மையா? பொய்யா? நடந்து கொண்டது சரியா? தப்பா? என்பவைகளை விபரமாக ஜனங்கள் தெரிந்து கொள்ள தேசியப் பத்திரிகைகள் இனிமேலாவது எழுத வேண்டும். அதை விட்டு விஷயங்களையும் சொல்லாமல், "திரு அம்பேத்கார் சுயரூபத்தைக் காட்டி விட்டார்; உளறினார்; பிதற்றினார்;" என்று எழுதி விட்டால் ஜனங்களுக்கு விஷயம் எப்படித் தெரியும்; அம்பேத்கார் காட்டின சுயரூபத்தால் இந்தியாவிற்கோ, இந்து சமூகத்திற்கோ, வந்து விட்ட தீமைகளை--தேசியப் பத்திரிகைகள் தெரிந்து கொண்டதை--ஜனசமூகத்திற்குத் தெரியப்படுத்துவது தானே பத்திரிகைத் தொழில்?

"தீண்டப்படாதவர்களென நிந்தித்து ஒதுக்கி, நாங்கள் அணுகுவது இழிவென்றும், நாங்களிருப்பது தீட்டென்றும், கருதும் ஒரு சமூகத்தின் கையில் தனிப்பிரதிநிதித்துவப் பாதுகாப்பின்றி, பிரிட்டிஷ் பார்லிமென்ட் எங்களை ஒப்படைக்கப் படாது" என்று திரு. அம்பேத்கார், திரு. சீனிவாசன் சொன்னதில் குற்றமென்ன? அதில் உண்மையல்லாதது எது? திரு. மாளவியா வேதம் படித்தவர், ஆங்கிலப்பண்டிதர், வக்கீல் தொழிலில் சமர்த்தர், காங்கிரசுக்கு முக்கியமானவர். சுயராஜியத்திற்கு அநேக ரிக்கார்டுகளை ஏந்தி நிற்கும் அந்தக் கையில் கங்கைத்தண்ணீரும், களிமண்ணும் எதற்காக கொண்டு போனார்? இவர்காட்டும்சுய ரூபத்தில் தீண்டாமை ஒழியும்படியான அறிகுறிகள் காணப்படவில்லையே? இதைக் கண்டால், வட்டமேஜை மகாநாட்டிற்குப் போனசாக்கில், தனது பத்திரிகை தான் சென்னையில் பிரபல்யமானதென்று சொல்லி விளம்பரம் சேகரிக்கும் பத்திரிக்கை ஆசிரியருக்குத்திருப்தியாக விருக்கலாம். ஆனால் அம்பேத்காருக்குப் பயமும், சந்தேகமுந்தோன்றாதோ?

"நாங்கள் செய்யும் தீண்டாமைக் கொடுமையால் உலகத்தார் முன்னிலையில் அவமானப்படுகிறோம். அந்தப் பாவம் தீர தவசிருக்க வேண்டும்" என்று வட்டமேஜை மகாநாட்டில் திரு. காந்தி சொல்லுகிறார். மிலேச்ச தேசத்திற்கு சுந்த தீட்டும், அவர்களுடன் கலந்திருக்கும் தீட்டும் போவதற்கு கங்கைத்தண்ணீரும், களிமண்ணும் கையிலேந்தி நிற்கிறார் மாளவியா. திரு. காந்தி சொன்னதையும், சொல்லுவதையும் மாளவியாவேட்டே இருக்க வேண்டும். மாளவியா கொண்டு போன கங்கைத் தண்ணீரையும், களிமண்ணையும் திரு. காந்தி பார்த்தே இருக்க வேண்டும்.

"பரத கண்டத்தை விட்டு அன்னிய பூமிக்குப் போன பிராமணனும், கப்பலேறின பிராமணனும் பிரஷ்டனாவான்" என்று ஸ்மிருதி என்னும் தரும சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. "கங்கைத் தண்ணீரில் எல்லாப் பாவமும் பரிகாரமாகி விடு"மென்றிருக்கிறது. அதனாலும், ஆங்கிலேய நாட்டிலிருந்தாலும் பரத கண்டத்து மண்ணை தொட்டுக்கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்ளும் பாவனைக்குமே கங்கைத் தண்ணீரையும், களிமண்ணையும், மாளவியா கொண்டு போயிருக்கிறார். இவ்வளவு அஞ்ஞானமும் வைதீகப்பற்றுமுடையவருக்கு தீண்டாமை விலகுவதற்கும், அதைத்தன் ஜனங்களிடை நிலை நிறுத்துவதற்கும் சாஸ்திரம் இடங் கொடுக்குமா? இதைப்பார்க்கும்? அம்பேத்காருக்கு சுய ரூபம் தோன்றினாலும் குற்றமெப்படியாகும் என்பதைத் தேசியப் பத்திரிகைகள் விளக்கட்டும்.

வைதீகர்கள், தீண்டாமையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்களேயல்லாமல், பிராமணர்களுக்கு விதிக்கப்பட்ட ஒழுக்கங்களையும், கடமைகளையும் தள்ளியே விட்டார்கள். அதைக்கேட்க யாருக்கும் அதிகாரமில்லை. ஏனெனில் தெய்வம் அவர்களுடையது. சாஸ்திரம் அவர்களுக்குச் சொந்தம். படிப்பு அவர்கள் கையிலிருக்கிறது. பணக்காரர்களும் அவர்கள் வார்த்தையைக் கேட்டு நடக்கத் தக்கப் பழக்க வழக்கங்களில் கட்டுப் பட்டிருக்கிறார்கள். மாளவியா அவர்களின் மத நிச்சயத்தை இந்து சமய வாதிகளெல்லாம் மெச்சிக் கொண்டாலும், அந்த வைதீகத்தின் கொடுமை மற்றவர்களுக்கு எவ்வளவு துன்பத்தை கொடுக்கக் கூடியவையாகவிருக்கின்றன என்பதை நினைக்கையில், "ஜனநாயகத்துவ மென்பது கூட்டம்போட்டு ஆள்வதல்ல. இனியும் சிறிது மேற்படியிலிருந்து ஆலோசித்துப்பாருங்கள்" என்று பிரிட்டிஷ் முதல் மந்திரி சொன்னதில் தான் குற்றமென்ன?

திரு. காந்தி அவர்கள் சட்டம் செய்து தீண்டாமையின் கொடுமையைப் போக்க உத்தேசித்திருக்கிறேன் என்று சொன்னார். நியாயமே தான். சட்டம் செய்கின்றவர்கள் யார்? ஒத்துக் கொள்ளுகிறவர்கள் யார்? மதத்தில் சட்டம் பிரவேசிக்கக்கூடாதென்று வைதீகர்கள் சொல்லுகிறார்கள். ஆங்கிலம் படித்தவர்களும், பண்டிதர்களும், அதை ஒட்டியே பேசுகிறார்கள். திரு. பாத்ரோவும் சட்டம் கூடாது என்கிறார். இவர்கள் சேர்ந்து பணக்காரனிடம் இதையே பாடிவைக்கிறார்கள். பணக்காரனும், அவர்களுடன் சேர்ந்து கொள்ளுகிறான். பார்ப்பன ஆதிக்கப் பத்திரிகைகளெல்லாம் அதற்கிசைந்தே பாடும்.

தீண்டாமை, மகமதியர்கட்கில்லாததினால் அவர்கட்கு கவலையே இல்லை. இந்து சமூகத்தில் தீண்டாமையிருக்கிறவரையிலும் மகமதியர்கட்கும், கிருஸ்துவர்கட்கும் அனுகூலமே ஒழிய பிரதிகூலமில்லை. இந்த நிலைமையிலிருக்கும் தேசத்தில், அன்னிய ராஜாங்கத்தினர் கட்டாயத்தின் பேரில், அவர்களுடைய நல்லெண்ணத்தைக் கொண்டு சட்டத்தால் சீர்திருத்தலாம். அப்பொழுதும் இந்த சமயவாதிகளிடம் உத்தியோகங்களிருக்கப்படாது. உத்தியோகங்களிருந்தால் அந்த சீர்திருத்தச் சட்டங்களை நடத்திவைக்கமாட்டார்கள்.

இப்பொழுதும் வழியில் போகிறவனை அடிப்பது சட்ட விரோதமேயாகும். வழியில் போகும் ஒரு தாழ்த்தப்பட்டவனை உயர்ந்த ஜாதி இந்து அடித்துவிட்டால் கீழதிகாரிகளுக்கு அது பெரிய குற்றமாகத் தோன்றுவதில்லை. ஏனெனில் அவர்கள் பலகாலமாகப் பழகிவந்த வழக்கத்தில் சாதாரணமாகவே படுகிறது. இந்துக்கள் தெய்வபக்தியும், சட்டத்திலடங்கி நடக்கவேண்டுமென்னும் எண்ணமுமுடையவர்கள்தான். அவர்கள் தெய்வங்களுக்கும், தெய்வத்தால் ஏற்பட்ட சாஸ்திர சட்டங்களுக்கும் தீண்டாமை திருப்தியாயிருக்கின்றன.

கலியாண வயதின் மசோதா சட்டசபைக்கு வந்து, கமிட்டி ஏற்பட்டு, விசாரணைசெய்து, முக்கியமானவர்களெல்லாம் சாட்சிசொல்லி ஜன சமூகம் அபிப்பிராயம் தெரியப்படுத்தி, கமிட்டியும் ரிப்போர்ட்டு செய்து, சட்டசபையில் தர்க்கமும் நடந்து, மெஜாரிட்டியால் தீர்மானமும் செய்யப்பட்டு வைசிராயைப்பார்க்க வந்தவர்களுக்கு வைசிராய் தகுந்த பதிலும் சொல்லி வைசிராய் சம்மதமும் பெற்று, சட்டமாக்கப்பட்ட சாரதா சட்டத்தை, இப்பொழுது மாற்றுவதற்காக சட்டசபையில் தீர்மானமும், அங்கங்கு வைதீகர்களின் கூட்டமும், வைசிராயைப்பார்ப்பதற்கு மாஜி ஐகோர்ட் ஜட்ஜி, பெரிய வக்கீல்கள், பென்ஷன் வாங்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள், இவர்களெல்லாம் போகிறார்களாம். இவர்களும்இவர்களைச்சேர்ந்தவர்களும்தானே திரு. காந்தி கொண்டுவரும் சட்டத்தை ஆதரிக்கவேண்டும். இவர்களில் பலர் திரு காந்தியைப்புகழ்கிறவர்கள்; எழுதுகையிலும், பேசுகையிலும் திரு. காந்தியை பிரமாணம் காட்டுகிறவர்கள். அப்படியிருந்தும் தீண்டாமைபோனால் சுயராஜியம் வரும். தீண்டாமை போனால் இந்து மதம் புனிதமாகும்மென்ற திரு. காந்தி சொன்னதை இவர்கள் ஒரு தரமாவது ஜனங்களுக்கு எடுத்தும் சொன்னதில்லை; தாங்கள் எண்ணிப் பார்த்ததுமில்லை

பலகாலமாக நமது நாட்டில் உண்மைக்குப் பரிந்து பேசாமலிருந்ததினாலேயே நமது நாடு கீழடைந்தது. ஐரோப்பாவில் அப்படியில்லை உண்மையை மனதில் அடக்கிவைக்காமல் வழக்கத்தில் காட்டுகிறார்கள். ராஜீயவிபகாரத்தில் எப்படியோ அப்படியே ஜனக்கட்டிலும் குற்றம் வெளிப்பட்டால் அதைப்பொது ஜனங்கள் உண்மைவிளக்கால் சோதித்துத் திருத்த வழியுண்டு. படித்தவனும், பத்திரிகையும் உதவியாக இருக்கின்றன. அதனால் கிடைக்கும் சக்தியும், விடுதலையும் எல்லோருக்கும் பயன்பட்டு நம்பிக்கையையும், தைரியத்தையுமுண்டாக்குகின்றன. அதனால் அவர்கள் உலகத்தின் மேற்படியிலிருக்கிறார்கள். நாமோ பணக்காரனாகவிருந்தாலும், படித்தவனாக விருந்தாலும், உண்மைக்குப் பரிந்துபேசாமல், வாயை மூடிக்கொண்டிருக்கிறோம். உண்மையை உலகத்திற்குச் சொல்லவந்த பத்திரிகைகளோ, ராஜாங்கத்தாரை நோக்கி, "சாம்ராஜ்ஜிய சபையில் ஸ்தானம் வேண்டும். பொறுப்பில்லாத அன்னியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறவேண்டும்" என்பவைகளைக் கூட்டியும், குறைத்தும் ஒரு பக்கம் எழுதுகின்றன. மறுபக்கமோ சாதியாச்சாரக்கொடுமை, மூடபக்தி, விவேகக் குறைவற்ற நம்பிக்கை, முதலியவைகளை ஜனசமூகம் கைவிடாமலிருப்பதற்கு வேண்டிய கதைகளையும், சாஸ்திரப் போலிகளையும் பிரசுரிக்கின்றன. அதில் திரு.காந்தி பக்கமிருக்கும் எ. ரெங்கசாமி அய்யங்கார் பத்திரிகையே முதலணியிலிருக்கின்றது.

சுயராஜ்ஜியம் கிடைத்த உடன் தாழ்த்தப்பட்டவர்களின் பாத்தியதை

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.)

விவாஹ ரத்து.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

(சென்றவாரத் தொடர்ச்சி.)

ஐரோப்பிய தேசங்களின் விவாகரத்து முறைகளையும், ஆசியாவிலுள்ள சில தேசங்களின் விவாகரத்து முறைகளையும் இதுவரைக்கும் சுருக்கமாகக் கண்டு வந்த நாம், இனி காணவும், கருதவும் எஞ்சி நிற்பது அமெரிக்கா தேசமும் அதில் வழங்கி வரும் விவாக விடுதலை முறைகளுமே யாகும். மேலே நாம் கூறியபடி 'விவாகரத்து' என்ற மாத்திரத்தில் அம்முறை வெகு தீவிரமாகவும் வெகு கேவலமாகவும் வழங்கி வரும் அமெரிக்கா தேசத்தைச் சுட்டிக் காட்டுவ தன்னியில், ஆங்கு சொல்லொணாத இழுக்குகளும் ஒழுக்க இழிவுகளும் ஏற்படுவதால் அத்தகைய தீமை பயக்கும் விவாகரத்தையே நம் இந்து சமூகத்தினர் கையாளுதல் தகாதெனவும் கூறுகின்றனர் பலர். ஆனால் இதில் நாம் உற்று நோக்கவேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. உலகத்திலுள் எவ்வளவோ தேசங்கள் இவ் விவாக விடுதலைச் சட்டத்தைக் கையாண்டு வந்துகொண்டிருப்ப. மக்கள் அமெரிக்கா தேசத்தை மட்டும் சுட்டி அங்கு அச்சட்டத்தால் மற்றெத்தேசத்திலுங் காண்பரிய ஒழுக்கக்குறைவு ஏற்பட ஏதுவாகின்றது என்று கூறுவாரேல் இதில் அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் இதற்குச்சில தனிப்பட்ட காரணங்கள் இருக்கல் வேண்டும் என நமக்குத்தெள்ளிதின் விளங்கவில்லையா? மீண்டும் ஒரு முறை தேசத்திற்கு தேசம் காலத்திற்குக் காலம் விவாகரத்துமுறை வேறுபடும் என விளம்புதற்கவசியம் இன்றென எண்ணுகின்றோம். ஆகவே நாம், அவ்வாறு அமெரிக்கா தேசத்தைச் சார்ந்தன என்று கூறப்படும் தனிப்பட்ட காரணங்கள் யாவை எனவும், அத்தகைய காரணங்கள் நம் இந்திய நாட்டில் இருக்க ஏது இல்லாமையால் அமெரிக்காவிற் காணும் மணக்குலைவாலும் தாழ்ச்சிகள் இங்கு நேருவதற்கு இடமில்லை எனவும் நம் நேயர்கட்குக் காட்ட முற்படுவோம்.

முதன் முதலில் அமெரிக்கர்களைப் பற்றியும் அவர்களின் சமூக அமைப்பு நிலைமையைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் கூறுதல் இன்றியமையாததாகும். ஆனால் உண்மையாகவே அவைகளைப்பற்றி நாம்கூற முற்படுவதில் திருமதி மேயோ என்னும் அந்நாட்டுப்பெண் நம்மவரின் எண்ணியதைப்போல அத்தேச மக்களின் மீது விஷமப் பிரசாரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லையெனவும் உறுதிகூறுவோம். மற்றும் நாம் இங்கு அமெரிக்கா தேசத்தைச் சார்ந்த மக்கள்-பத்திரிகை-இவர்கள் கூற்றையே எடுத்துக் காட்டுகின்றோமே யொழிய நாமாக ஒன்றும் எழுதவில்லை. தற்காலம் அமெரிக்கா தேசத்தில் அளவுகடந்த குற்றங்களும், சட்டங்களை மீறி நடத்தலும் அதிகரித்துக்கொண்டுவரும் விஷயம் அனைவரும் அறிந்ததே. இதைக் கண்ட பிரஸிடெண்ட் ஹூவர் (President Hoove) திரு. விக்கர்ஷாம் (Mr. Wickersham) என்பவர் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்தார். அக்கமிஷன் இப்பொழுது தமது அரிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் அமெரிக்கர்கள் சட்டவரம்பு மீறி நடப்பதற்கும் குற்றம் புரிவதற்கும் ஏற்பட்ட பலகாரணங்களைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அத்தேச சமூகத்தின் சட்டவரம்பு என்பதை அசட்டை செய்யும் குணம் கற்றவர், கல்லாதவர், பணக்காரர், ஏழை முதலியவரிடமும் வெகு சாதாரணமான பழக்கமாகவும், இயல்பாகவும் ஆகிவிட்டது எனக் கூறப்படுகின்றது. இக்காட்சியைக் கண்ணுற்ற நியூ ப்ரீமன் (The New Freeman) என்னும் ஒரு அமெரிக்கப் பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது. 'அமெரிக்கவது குற்றங்கள் என்னும் பிரச்சினை அத்தேசத்தின் சமூக நிலையை யொட்டியதோர் பிரச்சினையாகும். அமெரிக்கா தேசமானது தான் தோன்றிய நாள் தொட்டு சிறிதும் சட்டத்திற்கு கட்டுப்படாத தேசமாக இருந்து வந்திருக்கின்றது. காடுமலைகளில் வழிகாட்டியாக முதன் முதல் செல்பவன் சட்டவரம்பிற்குட்பட்டவனாதல் முடியாது. ஒரு பெரிய கண்டத்தைக் கைப்பற்றி ஆங்குள்ள மக்களை அடக்கியழித்தல் சட்டக்கட்டுக் கடங்காத சுயேச்சை வாழ்வை வளர்க்குந் தன்மை யதாயிற்று; ஆகவே அவ்வெள்ளையர் கொள்ளையடித்தலை பெருங்கலையெனக் கற்றனர். வழிகாட்டிகள் சட்டங்களைப் பெரும் இடைஞ்சல்களாகவே எண்ணினர். ஆகவே சட்டமீறுந்தன்மையானது அமெரிக்கர்களது வாழ்வில் மிகவும் இயல்பாக ஏற்பட்டு அவர் தம் எலும்பிலொட்டிய நோய் போல் வந்துள்ளது. முதலாளித்துவம் சட்டத்தையும் நியாயத்தையும் அழித்தே தான் வளரமுடியும்; சட்டத்திற்கு விரோதமான குற்றங்களாலன்றி அது பெருக முடியாது. அதிலும் அமெரிக்கா தேசத்து முதலாளி ஆதிக்கத்தை நிலைநாட்டிய மக்களைக் காட்டினும் குற்றம் புரிந்தோர் மற்றெந்த நாட்டிலும் இல்லை" ஆகவே பொதுவாகவே எத்தன்மையான சட்டங்கள் தம் நாட்டில் இருந்தாலும் அவைகளைப் பின்பற்றாமல் மீறி நடந்து குற்றங்கள் புரிவதே அமெரிக்கா தேச மக்களின் பிறவிக் குணம், மிக இயல்பான தன்மையென அந்நாட்டு அறிஞர் வாய்ப்பட்டே யறிந்தோம். குடிமறுப்புச் சட்டம் பல்லாண்டுகளாய் இருந்தும் அதற்கு விரோதமாகப் போட்டி போட்டுக் குடிக்கும் தேசம் அமெரிக்கா என்பதை யுணர்ந்தவர்க்கு மேலே கூறியவை யொன்றும் வியப்பைத் தாராவென நம்புகின்றோம்.

எனவே, நன்மை பயக்கும் சட்டங்களாயினும் அவைகளையே சட்டை செய்யாது அவைகட்கு மாறாக நடந்து குற்றம் புரியும் குணமுடைய அமெரிக்கர்கள், இயல்பாகவே தீயவை செய்ய இடம் பயக்கும் சட்டம் ஏற்பட்டால் எவ்வளவு தூரம் அவைகளால் ஒழுக்கத்தைக் காப்பாற்றும் நிலைமையில் இருப்பார்களென நம் நேயர்களே யூகித்துணரட்டும். விக்கர்ஷாம் கமிஷன் அங்கத்தினர் ஒருவர் கூறுவதைப்போல "அமெரிக்கா தேசத்தினர் மிகப்பெரிய எண்ணிக்கையுடைய பல சட்டங்களைச் செய்து வந்துளார்கள். அச்சட்டங்கள் மக்களின் வாழ்க்கையையும் நடத்தையையும் கட்டுப்படுத்தி கண்காணிக்கவே ஏற்படுத்தப்பட்டிருப்பினும் ஒவ்வொரு நாளும் அத்தேச மக்களிடம் சட்டவரம்பு மீறலும், குற்றங்கள் புரிவதுமான பழக்கம் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கின்றது."

இப்பொழுது அமெரிக்கா விவாகரத்துச்சட்டம் (அல்லது சட்டங்கள்) மிகவும் விரும்பத்தக்க முறையில் இல்லை என்று நாம் கூறவேண்டிய அவசியம் இல்லை. அவை அவ்வாறிருக்க காரணங்கள் பலவுண்டு. அதில் முக்கியமானது என்னவென்றால் இவ்விவாகம் முதலிய விஷயங்கள் மத்திய (ஐக்கிய) அரசாங்கத்தாலன்றி அத் தேசத்திலுள்ள பல்வேறு (States) மாகாண அரசாங்கத்தால் கையாளப்பட்டு வருவதே யாகும். 1776-வது ஆண்டில் பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து விலகிய காலத்தில், பதின்மூன்று குடியேற்ற நாடுகளும் அப்பொழுது வழங்கிவந்த சட்டங்களுடன் ஆரம்பித்தன. அப்பொழுது விவாகத்தை ரத்து செய்துகொள்ள யாதொரு வழியும் இல்லை. ஆனால் பல மாகாணங்களும் புதிதாக இவ்விஷயத்தில் எண்ணிறந்த பல சட்டங்கள் ஏற்படுத்த முயன்றன. அவையனைத்தும் மற்றெந்த நாட்டிலும் காண்பரிதாக விசனிக்கத்தக்கவையும் விபரீதமானவையுமான தன்மையனவாகும் என்று லார்ட் ப்ரைஸ் (Lord Bryce) என்பவர் கூறுகின்றார். முதல் முதலில் இங்கிலாந்தைப் போலவே ஒவ்வொரு மாகாண சட்டசபையிலும் ஒரு விவாகரத்துப் பிரேரபணை செய்யவேண்டியதாயிருந்தது. ஆனால் சீக்கிரம் இம்முறையின் தீமைகள் புலப்படவே இது கைவிடப்பட்டு, மணரத்து அளிப்பதற்கெனவே தனியாக நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே இப்போதிருக்கும் நாற்பத்தைந்து தொகையுடைய மாகாணங்களிலும் ஏறக்குறைய நாற்பத்தைந்து வகையான மணரத்து முறைகள் வழங்கி வருகின்றன. அமெரிக்கா தேசம் முழுவதிற்கும் ஒரேவிதமான விவாகரத்து முறை இல்லை. ஒரு மாகாணத்துச் சட்டத்திற்கும் மற்றொன்றின் சட்டத்திற்கும் பல வேறுபாடுகள் உண்டு. இத்தகைய நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதே; ஏனெனில் இது காரணத்தால் தான் பெருங் குழப்பமும், அடக்கமுடியாத ஒழுக்கமில் நடத்தையும் ஏற்படுகின்றன. ஏனைய தேசங்களிற் போல ஒரே சட்டம் அமெரிக்கா முழுவதற்கும் இருக்குமேல் இப்பொழுதுள்ள அளவு தீமைகள் விளைய இடமில்லை எனத்திண்ணமாய்க் கூறலாம். மற்றும் இதே காரணத்தால் தான், மிகவும் அற்பமான காரணத்திற்கு மணரத்து அளிக்கும் சட்டம் கொண்ட மாகாணத்திலிருந்து மணரத்தே முற்றிலும் இல்லாத மாகாணமும் அமெரிக்காவில் உண்டு. உதாரணமாக தென் கெரோலீனா (South Carolina) என்னும் நாட்டில் விவாகரத்தே கிடையாது. இதில் இன்னும் என்ன விசேஷம் என்றால் அந்நாட்டில் உள்ள மக்களிற் பெரும்பாலோர் பிராடஸ்டாண்டு (மணரத்தை யனுமதிக்கும்) மதத்தினர்; மிகச் சிலரே ரோமன் கத்தோலியர்.

இரண்டாவது அமெரிக்காவிலுள்ள பல மாகாணங்களிலும் விவாகரத்து அளிக்கப்படுவதின் காரணங்கள் பல வகையினவாகும். நியூயார்க் மாகாணத்தில் வழங்கும் ஆதி சோரம் என்னும் காரணத்திலிருந்து வாஷிங்டன் நாட்டில் வழங்கும்படியான மிகவும் அற்பமான காரணம் வரைக்கும் இருக்கின்றன. அந்நாட்டில் நீதிபதி மணத்திற்கு இருதம்பதிகள் இனிச் சேர்ந்து வாழார்; அவர் பிரிந்திருப்பதே நலம் என்று தோன்றின் அவர் ரத்தை அளிக்கலாம் என வுள்ளது. பொதுவாக கூறுமிடத்து எல்லா மாகாணங்களிலும் மனைவியை விட்டு வேறிடம் புகுதல் விவாகத்தை ரத்து செய்து கொள்வதற்குத் தகுந்த காரணம் ஆகும், இரு தம்பதிகளுள் யாராவது ஒருவரேனும் கொடூர நடத்தையுடையவராயிருந்து மற்றவரைக் கொடூரமாக நடத்தினாலும் அல்லது அவ்வாறு ஒருவர் மற்றொருவரால் நடத்தப்பட ஏதுவுண்டு என உண்மையாகப் பயந்தாலும் அவர்கள் மணம் ரத்து செய்யப்படும். 'இதே விதமாகப் பல மாகாணங்களில், கணவன் தன் மனைவியைப் போஷிக்கவும், காப்பாற்றவும் தவறினாலும், வழக்கமாகக் குடித்துக் கொண்டே வந்தாலும், கேவலமாகவும் அவமரியாதையாகவும் தன் மனைவியை நடத்தி வந்தாலும், கடுங் கோபியாக விருந்து எப்போதும் சீறி விழுந்து கொண்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

Socialism and Women.

பொதுவுடைமையும், பெண்களும்.

[இனிவரும் 'பொதுவுடைமை விஷயங்களென்ற' நூலின் ஓர் அத்தியாயம்,]

"ஜாதியும் வேண்டாம், சமயமும்வேண்டாம்,
ஆணுடன் பெண்ணும்
சமத்துவம் அடைந்தாற்போதும்."

பொதுவுடைமையோர் முழக்கம்.

(தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L.)

பல்லாயிரம் வருஷங்களாக ஏற்பட்டுவந்த முதலாளித்திட்டத்தில் [Capitalism] அதாவது, தனிஉடைமைத்திட்டத்தில், பெண்கள் கீழ்த்தரநிலைமையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றனர். மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் அந்தந்த காலங்களில் பெண்கள் எப்படிமதிக்கப்பட்டுவந்தார்கள் என்பது நன்கு விளங்குகின்றன.

காட்டுமிராண்டி உலகங்களில், எவ்விதமாக பெண்களை நடத்தி வந்தார்களோ இன்றும் சில இடங்களில் எவ்விதம் நடத்திவருகின்றார்களோ, அவ்விதமே இங்கும், எங்கும் நடத்திவந்திருக்கின்றார்கள். வண்ணான் வார்த்தையைக்கேட்டு, சீதையை அவள் கர்ப்பவதியாய் இருக்குங்காலை காட்டுக்கு அனுப்பிய ராமராஜ்யத்தில் பெண்கள் உரிமை இன்னவிதம் இருந்தது என்பது விளங்கவில்லையா? மகாபாரத காலத்திலும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தைக்கொண்டே பெண்களின்கதி இன்னதென்று தெரிந்துகொள்ளலாம். Suttee] அதாவது, உடன்கட்டை ஏறும் கொடூரப் பழக்கம் நமது இந்தியாவில் லார்டு வில்லியம் பெண்டிங் (Lord William Bentinik) காலம் வரை, அதாவது 1839 வரை பழக்கத்தில் இருந்துவந்ததாகத் தெரிகிறது. இந்த "புண்ணிய பூமியில்" இந்தக்கொடும் பழக்கம் நெடுங்காலமாக நிகழ்ந்து வந்திருந்ததைக்கொண்டே நமது ஜனசமூக வாழ்க்கை முன்காலத்தில் எந்தநிலையில் இருந்திருக்கும் என்பதை ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

டாகோமி (Dahomy) என்ற காட்டுமிராண்டிதேசத்தில், அதன் தலைவனுக்கு தசரத சக்ரவர்த்திக்கு இருந்ததாகச்சொல்லப்படும் 60,000 ஸ்திரீகளைப்போல், பல நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் இருப்பார்களாம்! அந்தத் தலைவன் இறந்த காலையில், அவன் மணந்திருந்த பெண்கள் எல்லோரையும் கொன்று விடுவார்களாம்! காட்டுமிராண்டிகாலத்தில் ஐரோப்பாவிலும் கூட பெண்களை இவ்விதமாகத்தான் நடத்தி வந்ததாகத்தெரிகிறது' ஆங்கில தேசத்திலும் இந்தக்கொடும் பழக்கம் சில ஆயிரம்வருஷங்களுக்குமுந்தி வழங்கிவந்ததாகச் சொல்லுகிறார்கள். 4000 வருஷத்திற்குமுந்தி ஏற்பட்ட இருக்குவேதத்தில் (Sattee) "ஸதியை"ப்புகழ்ந்து பேசி இருக்கின்றது. நேற்று வரை பெண்களுக்குஓட்டுஉரிமை இல்லாமலிருந்ததை நோக்கஇவர்கள் எந்நிலைமையிலிருந்திருக்கவேண்டுமென ஊகித்துக்கொள்ளலாம். ஐரோப்பா தேசத்தில் வெறி (பயித்தியம்) பிடித்த பெண்களை பேய்பிடித்தவளென்றும், (Witches) மந்திரக்காரி என்றும் கருதி நெருப்பில் போட்டு கொளுத்தியும் வந்தார்கள். நாளைக்கும் நமது இந்துலாப்படி (Hindu Law) பெண்களுக்கு எந்த மானுஷீக உரிமையும் கிடையாது. எந்த சொத்தும் கிடையாது. சொத்துக்களை விற்கவாவது ஒத்தி, அடமானம் செய்யவாவது உரிமைகிடையாது. ஏதாகிலும் குறித்த விஷயங்களுக்கு மாத்திரம் செலவு செய்யலாமேயொழிய, மற்றபடி தனக்கு வேண்டியபடி செலவு செய்ய சுதந்திரமில்லை.

பிரிட்டிஷ் (British) லாப்படி பெண்கள் சொத்து புருஷனுடைய சொத்தாகும். பல காலங்களாக, தான் பெற்ற குழந்தைக்கும் தனக்கும், சொந்தமில்லாமலே இருந்தது. பெண்களுக்கு, கடவுளே வேண்டியதில்லை என்று சொல்லும் மனித சமூகமும் உண்டு. "தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யுமழை" என்று பொய்யில்லாப் புலவன் கூறியதைக்கொண்டு, நமது தமிழ்நாட்டில் நமது பெண்மக்கள் அடைந்திருந்த அடிமைத்தனத்தைக் குறிப்பாகமதித்துக்கொள்ளலாம். பல ஆண்டுகளாக நடந்து வந்த உடன்கட்டை ஏறும் பழக்கத்தைக்கொண்டும், நமது நாட்டில், ஸ்திரீகளை நடத்திய விதத்தையும் எளிதில் யூகித்துக்கொள்ளலாம். மேலும், இந்தியாவில் விதவைகளை நடத்திவரும் கொடுமையைக்கண்டும நமது நாகரீக இழிவைக்குறித்தும் தலை இறங்க வேண்டிவருகின்றது. உயர் ஜாதி என்று வழங்கிவரும் பிராமணர்களில் விதவைகளை நடத்திவரும் விதம், சிலகாட்டுமிராண்டிகளிடமும் காண்பதரிது.

இந்துலாவின்படி மனைவி இறந்தபிறகு ஒருவன் மறுமணம் புரியலாம். ஆனால் புருஷனை இழந்தபெண் சாகும்வரை விதவையாகவே இருத்தல்வேண்டும்! இதனால் இந்த கடூரதிட்டத்தின் யோக்கியதை நன்கு விளங்குகிறது. நமது இந்துலா எவ்வளவு மானுஷீகமற்றதென்றும் காட்டுகின்றது. பொருளாதார நிலைமையிலேயும் பெண்கள் தாழ்ந்தே கருதப்பட்டு வந்திருக்கின்றார்கள். எத்தேசத்திலும் ஆண்களுக்குக்கொடுக்கும் கூலியைவிட பெண்களுக்குக்கொடுக்கும் கூலி குறைவே. பெண்கள் உணவை குறைவாகவே சாப்பிடவேண்டுமென்ற சித்தாந்தத்தின் பயன் இதுவாகும். இல்வாழ்க்கையிலேயும் ஆணுக்கும், பெண்ணுக்கும் உயர்வு தாழ்வுண்டு. ஆண்கள் சாப்பிட்டபிறகு பெண்கள் உண்ணவேண்டும், புருஷனுக்குமுன் சாப்பிடலாகாது. புருஷனுடைய பெயரையே சொல்லப்படாது. வீட்டைப்பெருக்குதலும், கழுவுதலும் பெண்ணுக்குரியவேலை. வேடிக்கையாக உலாத்துவது ஆண்களுக்குரியது. வீட்டை சுத்தமாக வைப்பது பெண்கள் கடனும், சோம்பித்திரிவது ஆண்கள் சுதந்தரமாம்!! இவன் இஷ்டப்பட்ட பெண்களை மணந்தாலும் அவளை தெருவில்விட்டு விடலாமாம் ஆனால் இஷ்டப்படாத புருஷனை பெண் நீக்கலாகாதாம்.

மனிதன் தன்னுடைய தேக பலத்தின் துணையால், பெண்களை எல்லா வாழ்விலும் தாழ்வுபடுத்தி தனக்கு வேண்டிய சுகபோகங்களை தானே அனுபவிக்கின்றான், பெண்ணோ தன்னுடைய தேககட்டு வித்தியாசத்தால் அவனுக்குப்பணிந்து நடக்க நேரிடுகிறது. உலகமுழுமையும் இந்த காரணத்தினாலேயே ஆண் உயர்த்தப்பட்டும், பெண் தாழ்த்தப்பட்டும் வந்திருக்கின்றனர். ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள தேககட்டு வித்தியாசம்பெண்கள் பிள்ளைகளைப்பெறவேண்டிய பாக்கியத்தால் உண்டாயிற்றென அறிக. பெண்கள் பத்துமாதமாக கர்ப்பத்தில் வளரும் கருவைத் தன் இரத்தத்தைக்கொண்டுபோஷிக்கவேண்டிய தாதலாலும், குழந்தையைப்பெற்ற பிறகும் அதனை தன் பாலைக்கொண்டு வளர்க்கவேண்டிய நிமித்தத்தாலும் புருஷனைவிட சற்று தேகபலம் குறைவுபட்டுள்ளது. இந்த இயற்கை பலவீனத்தை அனுகூலப்படுத்திக்கொண்டு புருஷன் ஸ்திரீகளை அடிமையாக்கிவந்திருக்கின்றான். உலகில் பெண்களை தாழ்வு படுத்தப்பட்டதற்குஇதுவே முதற்காரணமென அறிக. இந்தத்தாழ்வு நிலைமை மனிதனிடத்தே காணலாமேயொழிய மற்ற சீவன்களில் பார்ப்பதரிது.

பெண்களுக்குத்தான் பதிவிரதா தருமம்; ஆண்களுக்கில்லை என்பதும் இதேகாரணத்தினாலென அறிக. பதிவிரதாதர்மத்தை ஸ்திரீகள் பால் மட்டே வற்புறுத்துவதால்தான் ஆண்மக்களில் 100க்கு 70 பேர் மேகநோயால் அவதிப்பட்டு வருகின்றனர். ஆண்கள் செய்யும் இந்த துர்கருமத்தால் மேகநோய் பெற்றோருடன் போகாமல் தாங்கள் பெறும் இனிவரும் சந்ததியாரையும் பீடிக்க நேரிடுகிறது. இதனால் தற்கால மனிதகுலம் இனிவரும் மனித குலத்தை நரக வேதனைக்குட்படுத்த காரணகர்த்தாவாகின்றது. பெண்களை பலதுறையிலும் தாழ்த்தப்பட்டு வருகின்றமையால் மனிதப்பூண்டே தாழ்வடைந்துவிடும் என்பதற்குத்தடையில்லை. பலவீனமற்றபெண்கள் பெறும்மக்கள்பலவீனமடைந்துநாசமுறுவது திண்ணம். இவ்விதமாக பலவீனமடைந்துள்ள பிள்ளைகளால்இனி வரும் மனித குலம் க்ஷீணமடையுமென்பதற்கு ஐயமில்லை. இன்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

தாய் மொழி.

(சுயமரியாதைத் தமிழ் மாணவன்)

தமிழ் நாட்டினர்க்குத் தாயக மொழியாய்த் திகழ்வது தமிழ்மொழி யொன்றேயாம். தமிழ் என்னும் சொற்கு இனிமை, தட்பம் என்பது பொருள். இக்காலை, தமிழ் மொழிகற்பார் சிலரே. காரணம், முயற்சி இன்மையே என்னலாம். இத்தாய் மொழியாம் தமிழ் மொழியில் எவ்வித கருத்தையும் உணர்த்தும் சொற்கள் நிறைந்துள்ளன. எம்மொழித்துணையும் இச்செம்மொழிக்குத் தேவையில்லை. தானே தன்னியல்பில் இயங்கும் தனிச்சிறப்புடையது. இயற்கை மொழி, பிறமொழிக்கலப்பின்றியே பேசவும், எழுதவும் இடம் தரும். இம்மொழிக்கன்றி எம்மொழியினும் இத்துணைச்சிறப்பியல்புகள் இல்லை என்பதைத் தமிழகமேயன்றி பிறமேனாட்டாரும் அறிவர். அமிழ்தினுமினிய தமிழின் இனிய குளிர் தருகுணமே கற்போரைக் கனியச் செய்யும். இவ்வுயர் தனிச்செம்மொழி இமயம் தொட்டு குமரிவரை குமுறுகிறது. இது இங்ஙனமாக, ஒரு சில வயிற்றுப்பிழைப்புத்தேசிய வாதிகள் உயிரற்ற ஹிந்தியை உருவாக்க ஊர் ஊராய்த் திரிகின்றனர். தமிழர்காள்! இன்னுமா தூக்கம்! வேண்டாம், தூக்கம் விடுத்து ஆக்கம் தேடுங்கள்.

அன்று தான் உங்கள் நாடு பூவுலகம் போற்றும் பொன்னாடாய்த் திகழும். தமிழ்க்குடியீர்! உங்கள் தாயிடத்து அன்புண்டா? இல்லையா? அன்னியர் ஆட்சியிலும் அன்னியமொழி ஆதிக்கம், கொடிது! கொடிது!! ஆகலின், உறக்கம் விட்டு தாய்சேவைபுரிய வாருங்கள். அன்புளீர்! அன்னைதுயர் ஆற்றாது அலமருகின்றாள்! அவள் துயர் தமிழகம் எங்கணும் தாங்கமுடியவில்லை. அடிமை அகற்றி அமிழ்த மொழியைப் போற்றுங்கள். இந்நாள், செந்தேனினும் கட்டிப்பாலினுமினிய பசுந்தமிழைப் புறக்கணித்ததனாலன்றோ! அன்னியர் ஆட்சி தலைவிரித்தாடுகின்றது! இத்தமிழ் படுந்துயர் தணிக்கமுன்வாருங்கள்! செத்த மொழியாம் ஹிந்தியைச் சிலர் இது போழ்து தோளில் சுமந்து வந்து உயிர்ப்பிக்க முயல்கின்றனர். அடிமையுற்று அல்லலுறும் தாய்மொழி வளர்ச்சிக்குப் பாடுபடாது, பிறமொழியைப் பேணும் பேதையரை என்னென்றழைப்பது? சில நாட்களின் முன்னர், திருச்சி பெரியார் ஒருவர் தலைமையில் உயிரற்ற ஹிந்தியை உயிர்ப்பித்துப் பேசினதாகப் பத்திரிகையில் படித்தோம். இது உண்மையாயின், அன்னார் செயல் வருந்தத்தக்கது.

சுயமரியாதையுள்ள எவனும் இம்மானங்கெட்ட செயலின் முற்படான். இத்தகைய தமிழ்க் கோடரிக்காம்புகளின் செய்கை எதுபோன்றதெனின், கள்ளக் கணவனுக்கு (அன்னியனுக்கு)ப்பிறந்த குழந்தையொன்றை தன்மகவெனத்தோளில் தாங்கித் திரிந்த பேடியின் செய்கையினையே ஒக்கும். இவர்கள் கொண்டாடும் ஹிந்தியின் மதிப்போ எனின் ஹிந்து என்ற இழி சொல்லே விளக்கிநின்றது. இந்து என்றும் இந்தியாவென்றும் வழங்கிவரும் பெயர்கள் நம்நாட்டில் வழங்கி வரும் எந்த மொழியினின்றும் தோன்றியதன்று பின் என்னையோவெனில் பாரசீகபாஷையிலிருந்து வழங்கி வருகிறது. இவற்றை நமக்குத்தந்தவர் பாரசீகராவர். அவர்களின் மொழியில் இப்பதங்களுக்கு நாகரீகமற்றவர்கள் கபவர்கள் முதலிய இழிந்த பொருள்களைக் காணலாம். இதுநிற்க, சைவப் பெரியாரை எடுத்துக்கொண்டால் அவர்களின் தாய்மொழித் தொண்டு விளங்காமற்போகாது. சைவப்பெரியார் என்றும், மடாதிபதி என்றும், பண்டாரசன்னதிகள் என்றும் கூறி மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் இப்பாவிகள் தமிழுக்கியற்றிய உதவி என்னவென்று கேட்கின்றோம். அல்லது சைவப்பெரியார் மகாநாடுகதளால்மிழ்ச்சைவசித்தாந்த சமாஜம்போன்றவியாபாரவிளம்பரச்சபைகளால் தமிழ்வளர்ச்சிக்கு என்ன செய்தார்கள்? என்ன செய்யப்போகிறார்கள்? என்று தான் கேட்கின்றோம் நஞ்சினும் கொடிய இவ்வேடிக் கூட்டத்தார் ஒழிந்து, இவர்கள் கோவில் குளம், தீர்த்தம், மோக்ஷம், வேதபுராணேதிகாசங்கள் அழிக்கப்பெற்று அடியோடுமாய்ந்து மடிந்தாலன்றி அன்னைதுயர் தணியாது தமிழகம் அடிமை நீங்காது.

நாட்டின் உண்மை நலம் பேணுங்கள், காங்கிரஸ் புரட்டு, கதர் புரட்டு, ஹிந்திப்புரட்டு, முதலிய கொலைச்செயல ஒழிக்கப்படவேண்டும், அழிக்கப்படவேண்டும் என்பதை உணருங்கள். உறுதி! உறுதி!!

'மாற்றானுக்குஇடங்கொடேல்' என்ற மாசுமறுவற்ற மொழியை உன்னுங்கள்! உரங்கொண்டு எழுங்கள்! தமிழ்ப் பணியாற்றுங்கள்! தமிழக இளைஞர்காள்! வீரர்காள்! இதுவே சமயம் தாய்மொழியாம் தமிழ் மொழியை ஆதரியுங்கள்; தமிழ்நாடெங்கணும் உண்மைத் தமிழ்க்கழகம் பல காணுங்கள்! தமிழின் சுவை அறிந்து ஆடுங்கள்! பாடுங்கள்! முத்தமிழை நுகருங்கள்! உறக்கம் வேண்டாம்! உறக்கம் வேண்டாம்! காலத்தின் கருத்தறிந்து இன்னல் பல கடந்து கடன் ஆற்றுங்கள்! செத்தமொழியாம் ஹிந்தியை பகிஷ்கரியுங்கள்! கண்டனம் செய்யுங்கள்! தள்ளுங்கள்; குப்பையில் ஒதுக்குங்கள்! தமிழ் மொழியே தமிழகத்திற்கு உரியது. பிறமொழிகளைக் கற்பதோடு அமைந்து, அவை ஆதிக்கம் பெறின், அவை யிற்றை அடியோடு அழித்தெறியுங்கள்! இனி சில காங்கிரஸின்கூலிப்பத்திரிகைகளும் சேர்ந்து உயிரற்ற ஹிந்தியை உயிர்ப்பிக்க முயல்கின்றனர்.

ஆதலின், தமிழ் வீரர்காள்! இளைஞர்காள்! ஆண்மைகொண்டு வீறிட்டெழுங்கள்! மானங்கெட்ட, தன் மதிப்பற்ற; தேசியப் பத்திரிகைகளை வெட்டி வீழ்த்துங்கள்! மண்ணோடு மண்ணாய் மடியச்செய்யுங்கள்! அதுபோது தான் தமிழ்த்தாய் தளிமை பொறுப்பாள்! மற்றும், தமிழ் என்னும் தனிமொழியாம் இயற்கை மொழி நமக்கிருக்க, சில காங்கிரஸ் பத்திரிக்கைகள், அந்தோ சுயராஜ்யம், சுதேசி, பாரதநாடு, பாரதமாதா இவைபோன்ற இழிசனப்பதங்கள் கொண்டு தாயகத்தில் வழங்கி வருகின்றனர். இப்புன்சொற்களை, வன்சொற்களை, அடியோடு நம் நாட்டினின்று துறத்தி அடித்து, வேண்டுமேல் முறையே, இயல் மொழியில், விடுதலை, தமிழகம், தமிழ் நாடு, தமிழ்த்தாய், தமிழன் முதலிய செஞ்சொற்களைக் கொண்டு வழங்கவேண்டும். என்னருமை வாசகர்களே! ஈண்டு ஒரு பொருளை உற்று நோக்குங்கள்! மேற்கண்ட பதங்கள் எல்லாம் தாய்மொழியில் மலிந்து கிடக்க, அதைத்திரித்து நயவஞ்சகமாக நாவிற்கேலாத, இயற்கையாக உச்சரிக்க இயலாத, பிறமொழி கொண்டு பிதற்றுவானேன்? அந்தோ! அறியாமை! அடிமைப்புத்தியன்றோ காரணம். பிறமொழிக்கு நம் தாய்மொழி பிற்பட்டதல்ல, என்ற நல்லுணர்வு இருந்தால், இங்ஙனம் நாவால் செத்தமொழியைத் தீண்டுவார்களா? இந்தியை உலகப்பொது மொழியாக்கவேண்டுமாம்! என்னே! சூழ்ச்சி! என்னே வஞ்சகம்! சூது! தமிழர்களே! உங்கள் உடம்பில் நல்ல இரத்தம் ஓடுகிறதா? இல்லையா? இக்கொடுமை கண்டு உங்கள் உள்ளம்கொதிக்கவில்லையா? தமிழ்த்தாயின் அடிமை அகற்றமுற்பட்டெழுங்கள்! இல்லையேல், உயிரற்ற ஹிந்தியோடு நீங்களும் உயிரற்ற கோழைப்பேடிகளாகுங்கள்!

எனதருமைச் சுயமரியாதை அன்பர்களே! உங்களால் தமிழ் சீர்திருந்திச் செம்மையுறும்! உங்களால் ஆகாதொன்றில்லை. இவ்வுண்மை உலகறியும். இனி, வாளாவிராது ஆண்மை கொண்டு, பகுத்தறிவு கொண்டு பணியாற்ற முன்வாருங்கள்! ஒன்றுகூடுங்கள்! பார்ப்பனீயத்தை வளர்க்கும் காந்தியம், கதர், மதுவிலக்கு, தேசீயம் முதலிய மதிகெடுக்கும் புரட்டை அஞ்சாது எடுத்தறையுங்கள்! அதோடு தாய் மொழித்தொண்டு ஆற்றுங்கள்! தாரணியெங்கணும், பகுத்தறிவாம் தமிழ்த்தெள்ளறிவு பெற்று வெற்றி முரசம் உயர்த்துவோமாக!

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India. Ltd., Bombay No. 10.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்குஎழுதவும்.

YX

C/o குடி அரசு ஈரோடு.

கட்டுப்பாடு என்பது சுயநலமே

(சாமி சிதம்பரனார்.)

'கட்டுப்பாடு' என்பதன் பொருள் சட்டுப்படுதல் என்பது. உலகில் உள்ள மதவாதிகளும், மற்றும் அறிஞர் என்று பாமர மக்களால் கருதப்படும் நிலையில் இருக்கின்றவர்களும், 'கட்டுப்பாடு வேண்டும், கட்டுப்பாடு இல்லாவிட்டால் உலகம் மோசமாகப்போய்விடும். மக்கள்வரை முறையின்றி நடக்க ஆரம்பித்து விடுவார்கள். ஆகையால் மதசம்பந்தமான கட்டுப்பாடுகள் அவசியம்' என்று சொல்லுகின்றார்கள்.

நாமும் 'ஒரு கட்டுப்பாடுவேண்டும்' என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் அக்கட்டுப்பாடு எப்படியிருக்க வேண்டும், என்பதில்தான் நமக்கும் சனாதன தர்மக்காரர்களுக்கும், அபிப்பிராயபேதம். நாம் விரும்பும் கட்டுப்பாடு 'மக்கள் மக்களாகவே வாழவேண்டும். மக்களை மக்கள் அடிமைப்படுத்துதல் கூடாது. சில மக்கள் சுகமடைவதற்காகப் பல மக்கள் துன்பம் அடையக்கூடாது. பிறர் உழைப்பில் மற்றவர்கள் சோம்பேரியாக இருந்து ஏமாற்றி வயிறு பிழைக்கும் வாழ்வு ஒழியவேண்டும். தேசம் எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். மதபேதங்கள் ஒழிந்து ஒருவரோடு ஒருவர் சகோதரத்துவம் பாராட்ட வேண்டும். சாதிகள் நீங்கி சந்தோஷ வாழ்க்கையைப்பெற வேண்டும். ஆண்பால், பெண்பால் என்ற வேற்றுமை அகல வேண்டும். இருபாலார்க்கும் சமசந்தர்ப்பமும், சமஉரிமையும் இருக்கவேண்டும் என்பதாகும்.

இத்தகைய கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதற்கு ஒரு கடவுளோ, ஒரு சாஸ்திரமோ, ஒரு மதமோ, ஒரு சட்டமோ இருந்தால் அவற்றைத் தாராளமாக வரவேற்கின்றோம்.

இப்படி இல்லாமல் மக்களோடு மக்கள் ஒன்று சேரமுடியாமலும், தேசத்தோடு தேசம் ஒன்று சேர முடியாமலும், மதத்தோடுமதம் ஒன்று சேர முடியாமலும், சாதியோடுசாதி ஒன்று சேரமுடியாமலும், பிரித்து வைப்பதற்காக ஏற்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் ஒழிந்துதான் தீரவேண்டும். இவ்வாறான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருப்பது கடவுள் என்று சொல்லப்படுவதாய் இருந்தாலும் சரி, மதமாயிருந்தாலும் சரி; வேதமாயிருந்தாலும் சரி, மற்றும் எந்த அவதாரமாயிருந்தாலும் சரி, ரிஷியாயிருந்தாலும் சரி, அரசாங்கமாயிருந்தாலும் சரி, அவற்றை நாம் பொருட்படுத்தாமல் ஒழிக்கவே முயலவேண்டும். இவை ஒழிந்தால்தான் நாம் மேலே கூறிய உண்மையான சமுதாய வாழ்க்கைக்குத்தகுந்த கட்டுப்பாடு உண்டாக முடியும்.

ஆகவே தற்காலத்தில் உள்ள கட்டுப்பாடு என்பது உண்மையில் எல்லா மக்களுக்கும் நன்மையளிக்காத காரணத்தால் இதைச்சுயநலம் என்றே கூறவேண்டும்.

இவ்வாறு படித்தவர்கள், பணக்காரர்கள். உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களின் சுயநலத்திற்கான விஷயங்களைக் 'கட்டுப்பாடு' நீதி 'ஒழுக்கம்' என்னும் பெயர்களால் மக்களுக்கு இளம் பருவந்தொடங்கியே எவ்வாறு போதிக்கப்படுகின்றதென்பதைக்கவனிப்போம்.

முதலில் தந்தை, தாய், குரு முதலானவர்களைத் தெய்வமாகப்போற்ற வேண்டும் என்று போதிக்கப்படுகின்றது. பெரியோர்கள் சொல்லும் வார்த்தைகளை மீறி நடக்கக்கூடாதென்று சொல்லப்படுகின்றது. தன் மனம்போன போக்கில் போகக்கூடாதென்றும், தனக்கு மேலாக இருக்கிறவர்கள் சொல்வதைக்கேட்டு அதன்படி ஒழுகவேண்டும் என்றும் சொல்லப்படுகின்றது. இது முதலில் சொல்லிக்கொடுக்கும் கட்டுப்பாடு. இதனால் விளையும் பயனைப் பாருங்கள்.

தாய் தந்தையர்கள் மக்களின் நன்மையில் கருத்துடையவர்கள். அவர்கள் தம்மக்கள் துன்பம் அடையத்தக்க வழிகளைச்சொல்லமாட்டார்கள். சுகத்தோடு வாழத்தகுந்த விஷயங்களையே சொல்லுவார்கள் என்பது உண்மை. ஆகையால் அவர்களுக்கு மக்கள் கட்டுப்பட்டு ஒழுகவேண்டியதே ஆனால் சாதி சமயச்சேற்றில் ஆழ்ந்து அடிமை மனப்பான்மையுடைய தாய் தந்தையர்களின் உபதேசங்களையும், 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' 'தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை' என்பவற்றை நம்பி ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது இல்லை

அடுத்தபடியாக குருவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்னும் கட்டுப்பாடு அடியோடு ஒழியவேண்டும். ஏனெனில் குருமார்கள் என்பவர்கள் இயற்கையில் சொந்த அறிவில்லாதவர்கள். 'சொல்லியதைச்சொல்லும் கிளிப்பிள்ளை' என்பதுபோல தாம் படித்தவிஷயங்களையே திரும்பவும் வாந்தியெடுப்பவர்கள். தாம் சொல்லுவதுதான் உண்மை என்னும் கண்மூடிக்கொள்கை உடையவர்கள் மக்களின் சொந்த ஆலோசனையை மழுக்கி அடிமையாக்குகின்றவர்கள். ஆகையால் குருமார்களின் உபதேசங்களில் உலக இயல்புக்கு-மக்களின் நன்மைக்கு -- ஏற்ற உபதேசங்கள் இருக்குமாயின் அவற்றை எடுத்துக்கொண்டு மற்றவற்றை அலட்சியம் செய்வதே முறையாகும். ஆகவே 'குருவே தெய்வம்' 'குருவே துணை' என்னும் கட்டுப்பாடு ஒழியவேண்டும்.

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையவேண்டும். 'தம்மினும் மெலியாரை நோக்கித் தமது உடமை அம்மா பெரிதென்று அகம் மகிழ்க' என்று உபதேசிக்கப்படுகின்றன. இவையும், கட்டுப்பாடும், ஒழுக்கமும், நீதியும் ஆகும். இந்தக்கட்டுப்பாடும், ஒழுக்கமும், நீதியும், எதற்காக ஏற்பட்டன? பணக்காரர்களைப் பணக்காரர்களாகவே வைப்பதற்கும், ஏழைகளை ஏழைகளாகவே வைப்பதற்கும் ஏற்படுத்திய நீதியும் கட்டுப்பாடுமாகும்.

ஏழையாக இருக்கின்ற ஒருவன் தனக்கு ஒருவேளை சோறு கிடைத்தால் அதைக்கொண்டே அவன் திருப்தியடையவேண்டும். மூன்றுவேளையும் சாப்பிடுகின்றவனைப்பார்த்து நாமும் அம்மாதிரி சாப்பிடவேண்டும் என்று நினைப்பது தவறாம். அது பேராசையாம். அவர்கள் மூன்று வேளையும் சாப்பிடுகின்றார்களே நமக்கு அவ்வாறு இல்லையே என்று நினைப்பது பொறாமையாம். இப்படியான உபதேசங்களில் ஈடுபடுகின்றவன் எப்படி சமஉரிமை பெறமுடியும்? சுதந்தரம் அடையமுடியும்?

ஆகவே பொறாமைப்படக்கூடாது; ஆசைப்படக்கூடாது; அதிருப்தி அடையக்கூடாது என்பவைகளைத்தாழ்த்தி வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள்.

"ஈகைத்தருமம் அவசியமாகும். இல்லறத்தான் ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும்" என்று நீதிநூல்கள் கூறுகின்றன. சிறுபிள்ளைகளுக்கே "அறம்செய விரும்பு, இயல்வது கரவேல், ஈவது விலக்கேல்" என்று போதிக்கப்படுகின்றது. இந்தக்கட்டுப்பாடான உபதேசத்தால் ஜன சமூகம் அடையும் தீமையைப் பாருங்கள். ஒரு கூட்டத்தார் பொருள் சேர்த்து வைத்துக்கொண்டு சுகமாக வாழவும், ஒரு கூட்டத்தினர், பொருள் வைத்திருப்பவருக்குக் கீழ்ப்படிந்து அவர் கொடுப்பதை வாங்கி உண்ணவும் ஏற்படுத்திய கட்டுப்பாடேயாகும். கொடுப்பவர் இல்லாவிட்டால் வாங்குபவரும் இருக்கமாட்டார்கள். அவரவர்கள் ஒவ்வொரு வழியில் சுதந்தரமாகச் ஜீவனம் செய்ய வழி தெரிந்திருப்பார்கள்.

எல்லாம் தெய்வச்செயல் என்றும், ஏழையாய் இருப்பதும், பணக்காரனாய் இருப்பதும், கடவுள்செயல் என்றும், அறிவுடையவனாய் இருப்பதும், முட்டாளாய் இருப்பதும், பூர்வவினை என்றும், உயர்ந்தவனாய் இருப்பதும், தாழ்ந்தவனாய் இருப்பதும், கடவுள் சித்தம் என்றும், கட்டுப்பாடாகப் போதிக்கப்படுகின்றன. இதனால் மக்களுடைய உழைப்பும், முயற்சியும் ஊக்கமும் அடக்கப்படுகின்றன. இளம்பருவம் முதலே மேற்கூறிய உபதேசங்களைக் கேட்டறிந்த ஒருவன் எப்படித்தனது வாழ்க்கையில் "பிறருக்குச்சமானமாக நாமும் ஆகவேண்டும்" என்று நினைத்து உழைக்க முன் வருவான்? "நமக்கு ஏற்பட்டது இவ்வளவுதான்" என்று எண்ணி எப்பொழுதும் தான் இருந்த கஷ்டநிலைமையிலேயே இருக்க வேண்டியவன் அல்லவா?

ஆகையால், தெய்வ நம்பிக்கைக் கட்டுப்பாடுகள், மத நம்பிக்கைக்கட்டுப்பாடுகள், பூர்வவினை நம்பிக்கைக் கட்டுப்பாடுகள் அழியவேண்டும்.

தெய்வ நம்பிக்கை, மத நம்பிக்கை, தலைவிதி நம்பிக்கை, முதலிய கட்டுப்பாடுகளால் தான், ஒரு நாளைக்குப் பகல் 12 மணி நேரமும், இரத்தவேர்வை சிந்தவேலை செய்கின்றவன் திருப்தியாக உண்ணுவதற்கு உணவின்றியும், சுகமாக வசிப்பதற்கு இடமின்றியும், அழகாக உடுத்துவதற்கு ஆடைகளின்றியும் அல்லற்படுகின்றான். தன்னை, கடவுளும், மதமும், தலைவிதியும், அப்படி வாழவே உண்டாக்கின என்று நினைக்கிறான். ஒருவேலையும் செய்யாமல் பிறரை ஏமாற்றித் தனக்கு அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கின்றவன், தனது சுகபோகங்களுக்குப் பூர்வ புண்ணியமும், தலைவிதியும், அதிஷ்டமுமே காரணம் என்று நினைத்து இறுமாப்படைகிறான். ஆகவே சமத்துவம் என்பது உலகில் இல்லாமல் ஒழிகின்றது. ஆகையால்தான் மேலேகூறிய மதம், தெய்வம், விதி, வினை முதலிய கட்டுப்பாடு ஒழியவேண்டுமென்று கூறுகின்றோம்.

கற்பு என்பது தெய்வீகத்தன்மை பொருந்தியது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணங்கள் பெண்களுக்கு உரியன. இவையில்லாத பெண், நரகத்தை அடைவாள் என்ற கட்டுப்பாடுகள் பெண்களை ஆண்களுக்கு அடிமையாக வைத்திருப்பதற்கே ஆகும்.

மேற்கூறிய கட்டுப்பாடுகளால் தான் பெண்கள் ஒருமுறை தான் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்றும், கணவன் இறந்தால் மறுமணம் செய்துகொள்ளக்கூடாதென்றும், கணவன் தள்ளிவிட்டாலும் வேறு மணம் செய்துகொள்ளக்கூடாதென்றும், பெண்களுக்கு ஒருவகையான நீதியும், ஆண்கள் எத்தனை பேரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்றும், மனைவி இறந்துவிட்டாலும் வேறு மணம் புரிந்து கொள்ளலாம் என்றும், மனைவியைத்தள்ளிவிட்டு வேறுமணம் செய்துகொள்ளலாம் என்றும், மனைவியிருக்கும்போதும் கணவன் இஷ்டப்படி நடக்கலாம் என்றும், ஆண்களுக்கு ஒருவகையான நீதியும் ஏற்பட்டன.

"ஆண்களைப்போல் பெண்களும்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க,

சிவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

(தோழர் அ இராகவன்)

உடையும் முடியும்:—உடை விஷயத்தில் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் இந்திய நாட்டின் பல விடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. மஹாராஷ்டிரம் முதலிய நாடுகளிலே பெண்டிர்கள் 24 முழச் சேலைகள் கட்டவேண்டும். அதிலும் கதர் சேலை கட்டுவதென்றால் எத்துணை கஷ்ட மென்பதை யூகித்துக் கொள்ளுங்கள். அந்தோ! கொடுமை! கொடுமை!! பெண்டிர்களை மனித உருவமென்றெண்ணாது ஒரு கழுதைப் பொதியை அவர்கள் எப்பொழுதும் சுமந்து திரியும்படி செய்வது அறமா? ஜீவகாருண்ய விஷயத்தில் உலகிலுள்ள எல்லா சமயத்திலும் சிறந்து விளங்குவது "சைவம்" என்று அச்சமயத்திலுள்ளோர் பலராலும் போற்றப்படும் ஒரு சமயத்தை ஆராய்ந்தால் அஃது எவ்விஷயத்திலாவது பெண்மணிகளிடம் ஜீவகாருண்யம் காட்டுகிறதில்லை யென்பது விளங்கும். சைவப் பெண்கள் எங்காவது 12 முழத்திற்குக் குறைந்த உடை கட்ட அனுமதிப்பதில்லை. பெரும்பாலோர் 16 முழச் சேலை தான் கட்டி வருகின்றார்கள். உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் ஆண்கள் உடம்பில் ஒன்றும் அணியாது இடுப்பில் 4 முழ வேஷ்டியும் மேலே 8 முழத் துண்டும் போட்டுக் கொள்வதே சிரமமாயிருக்கிறது. பல விடங்களில் நமது அன்பர் திரு. காந்தியவர்களைப் போல் அரையில் ஒரு சிறு துண்டு மாத்திரம் அணிந்து கொண்டிருக்கும் மனிதருமுளர். அதிகமாக உஷ்ணத்தினால் புழுக்க மேற்பட்டால் எந்தப் பெண்கள் முன்னிலையிலும் ஆண்மகன் அரையில் ஆடையின்றி ஒரு சிறு கௌபீனம் மாத்திரம் கட்டிக் கொண்டு விசிறியினால் வீசிக் கொண்டிருக்க நாம் அடிக்கடி பார்க்கின்றோம். பெண்மக்களோ 16—20 முழச் சேலைகளையும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இரண்டு மூன்று சட்டையும் அணிவதுடன் அவர்களின் ஆடை பாதந்தெரியாது கட்டப் பட்டிருக்க வேண்டும் என்பது ஆண்மக்களின் விருப்பம். மதத்தின் நோக்கம். அஃதன்றி பெண்டிர்கள் கொஞ்சம் கரண்டைக்கால் தெரியும் படியோ சிறிது மெல்லிய ஆடையோ அணிந்து விட்டால் வந்தது அவர்களின் கற்புக்கு ஆபத்து என்று கூப்பாடு போட்டு விடுகிறார்கள். இவ்வாறு விரும்பும் ஆண்மகன் கட்டி யிருப்பதோ 4 முழ முள்ள இனால்கோமல். காற்றடித்தாலோ கேட்கவேண்டியதில்லை. இப்புண்ணியவான்களிற் பலரை யான் திருச்செந்தூர் முதலிய புண்ணிய ஸ்தலங்களில் பன்முறையுங் கண்டிருக்கின்றேன். தம் மெல்லிய வஸ்திரத்தோடு குளித்து விட்டு அந்த ஈர வேஷ்டியுடன் ஆண் பெண் முதலியோர் கூட்டங்களுக்குள் வந்து நிற்கின்றார்கள். என்னே ஆபாசம்! இவர்கள் ஏன் இந்த அரை வேஷ்டியும் அணிந்திருக்கிறார்கள் என்பதே என் மனத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் வினாவாகும். இத்தகைய அயோக்கியர்களும் பெண்டிர்களின் ஆடையின் நீளத்தைக் குறைக்க வேண்டு மென்றால் சம்மதிக்க வழியில்லை. (பெண்கள் ஆடை முரடாயிருக்க வேண்டு மென்பது எனது நோக்க மன்று.) ஆணுக்கொரு நீதி பெண்ணுக் கொரு நீதி இவ்வுடை விஷயத்திலுமா யிருக்க வேண்டும். பெண்கள் சில மிருக சுபாவமுள்ள ஆண்மக்களிடம் தனியான யிடத்தில் அகப்பட்டுக் கொண்டால் அந்த ஆண் கொடியர்களிடம் இருந்து தப்பித்துக் கொண்டு ஓடி விடுவதற்கு தடையாக மூன்று நாலு சுத்துப் போட்டுக் கட்டிய அன்னார் சேலைகள் தாம் என்று சொல்வது மிகையாகா. எனவேதான் சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் பெண் மக்கள் பால் ஜீவகாருண்யம் கொண்டு அவர்களின் உடையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார். அதாவது அரையில் 4 அல்லது $4\frac{1}{2}$ முழ முரட்டுத் துண்டு கட்டிக் கொள்வது பெண்களுக்கு மிக நல்லது. அது முகமதிய சகோதரர்களின் சாரங்களைப் போன்று இரு பக்கங்களும் மூடப் பட்டிருத்தல் வேண்டும். மேலே ஒரு சட்டையும் சுமார் 4 முழத்தில் ஒரு தாவணியுமிருத்தல் வேண்டும். இதுவே பெண்களுக்கு ஏற்ற உடை; இந்திய நாட்டிற் கேற்ற தேசிய உடை பெண்களின் சுகாதாரத்திற்கும் ஆபத்தின் பொழுது திடீரென ஓடவும் கஷ்டமின்றித் துவைக்கவும் ஏற்றதாகும். அசாம், திருவாங்கூர் இராஜ்ஜியத்திலு மட்டுமல்ல, மலாய் நாட்டிலும் இந்த உடை பணக்காரர் முதல் ஏழைகள் வரை உடுத்தப் பட்டு வருகிறது. மேலும் இவ்வுடை வெள்ளை உடையாக இருப்பது நலம். பொதுவாக உடை அதிக மினுக்காகவும் மனதை மயக்கத் தக்கதாகவும் இருக்கக் கூடாது. பெண்டிர்களின் இயற்கை யழகை அதிகமாய் செயற்கை யழகால் பெருக்கிக் காட்டுவதினால் உடல்வலி அதிகம் பெற்று மனவலி குறைந்த சில ஆண் பேய்கள் மயக்கமுற்று சிற்சில விடங்களில் பெண் மக்கள் துன்பத்திற்காளாக்கப் படுகின்றார்கள். இவ்வாற்றிலும் கூட மினுக்கான அதாவது ஆடவர்கள் மனதைக் கொள்ளை கொள்ளும்படியாக பகட்டுடைகள் அணிவது மறுக்கப்படுகிறது. மேலும் வெள்ளையுடை அசுத்தத்தை உடனே நன்கு எடுத்துக் காட்டுவதுடன் பெண்களின் சுகாதாரத்திற்கும் ஏனைய நலத்திற்கும் ஏற்றதாய் இருக்கிறது. இது பெரும்பாலும் ஐரோப்பிய பெண்மணிகளால் தேசத்திற்கேற்ப சிறுமாறுதல்களுடன் அனுஷ்டிக்கப்படினும் அன்னோர்களின் மாலையுடை வெள்ளையேயாகும். கிருஸ்த்துவ சகோதரிகள் கூட சிற்சில விடங்களில் இதை அனுஷ்டித்து வருகிறார்கள். அவர்களின் மதம் பழக்க வழக்கம் இதற்கு எட்டுணையும் மாறுபட்டிருக்கவில்லை. நம் நாட்டிலுள்ள ஜீவகாருண்யமதமோ பெண் வெள்ளையுடை அணிவதை கண்டிக்கிறது. விதவைகள் மாத்திரம் தான் வெள்ளையுடை அணியலாம் என அறைகிறது. தமிழிலுள்ள பழைய நூற்களை நுணுகி ஆராய்ந்த அறிஞர்கள் பண்டைக்காலத்து தமிழ் நாட்டிலுள்ள பெண்கள் விவாஹம் ஆவதற்கு முன்னரும் கூட வெள்ளையுடை அணிந்திருந்தார்கள் என்று கூறினும் சிவகாருண்ய அன்பர்கள் அதைப்பற்றி அறியார்கள். சுயமரியாதைத் தலைவர் கூறியபடி. சுருங்கிய ஆடைகள் பெண்கள் அணிவதற்கு அவர்களின் பழக்க வழக்கம் இடங்கொடுக்கவில்லை. ஆண்மகன் தன் உடையை காலத்திற்குக் காலம் மாற்றி வருகின்றான். வேஷ்டி கட்டியவன் ஐரோப்பியன் போல் கால்சட்டையும், பூட்சும், தொப்பியும் அணிந்து கொள்ளுகின்றான். பெண்மணிக்கோ ஒன்றும் மாற்றஞ்செய்ய உரிமையில்லை. வெயிற்காலத்தில் செருப்புப்போட்டு நடக்கவும், குடைப் பிடித்து நடக்கவும் வழியில்லை. அந்தோ! கொடுமை!! கொடுமை!!! இத்தகைய கொடியோர்களுக்கு சிவகாருண்யமும் ஒருகேடா? தங்களை கடவுள் நம்பிக்கையுடையவர்களென்று சொல்ல வெட்கப்படவேண்டாமா? பெண்மக்களை இத்தகைய கொடுமைக்காட்படுத்துபவர்களுக்கு எக்கடவுள்தான் ஆதரவுகாட்டும். ஆதரவு காட்டும் ஒரு பொருளிருந்தால் அதைக்கடவுளென உலகத்திலுள்ள அறிவுடைய அன்பர்கள் ஒப்புக்கொள்வார்களா? இத்தகைய கொடுமைகளை ஒழித்து பெண்டிர்களுக்கு நன்மை செய்பவர் எவராயிருப்பினும் அவரே சிவகாருண்ய சீலர் என்பது எனது அபிப்பிராயம்.

ஆண் பெண் இருபேர்களுக்கு இயற்கையாகவே மண்டையில் முடிமுளைக்கின்றது. இயற்கையுடன் வாழ்ந்த ஆண்-பெண்ணாகிய பண்டைய தமிழ் மக்கள் தலைமயிரை நீளமாய் வளர்த்து வந்தனர். பின்னர் பல அசௌகரியத்தின் காரணமாக ஆண்கள் அன்பர் காந்தியைப்போல் உச்சியில் சிறிது முடியை வைத்துக்கொண்டு மற்றவைகளை சிறைத்து வந்தனர். பின்னர் ஐரோப்பிய நாகரீகங்கண்டு மிக வசதியாய் கிராப் செய்து கொண்டனர். பெண்மகள் கதியோ அதோ கதிதான். அவள் தன் வசதிக்கேற்றவாறு மயிரில்கூட சீர்திருத்தம் செய்ய வழியில்லை. பெண் நீண்டகேசத்தினால் படுந்துன்பம் அதிகம். ஒரு பகலில் அதிகமான நேரம் அவர்கள் தலைமயிரைக் கவனிப்பதிலேதான் செலவிடப்படுகிறது. சிலவீடுகளில் பெண்டிர்கள் காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்துவிட்டால் சுமார் 9 மணி வரை தம் வீட்டிற்குள்ளிருந்து தலைமயிரை உலர்த்துகின்றார்கள் பின்னர் எண்ணெய் தேய்த்து சடைபின்னிக்கொள்வதற்குள் மணி 11 ஆகிவிடுகிறது. பின்னர் காற்றினால் சிறியதலை உலர்ந்துவிட்டால் மாலையிலும் சில மணி நேரம் சீவுவதில் செலவிடுகின்றார்கள். பெண்களின் நிலையை என்னென்ன மொழிவது! சிற்சில சமயங்கள் மாலைவேளைகளிலோ இரவிலோ ஸ்நானஞ்செய்யும் படி நேரிட்டால் தலை உலராமல் பெண்கள் படும் கஷ்டங்களும் அதனால் மண்டையிடி முதலிய வியாதிகளுக்கு ஆட்படுவதும், ஒன்றிரண்டு நாள் தலையைக் கவனியாதிருந்து விட்டா

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

அடுத்த வாரம்
இரண்டு ரகசியங்கள்
வெளிவரும்.

1. சென்னை கார்ப்பொரேஷன் தேர்தலைப்பற்றிப் பார்ப்பனர்கள் குறை கூற ஆரம்பித்ததின் ரகசியம்.

2. திரு. காந்தி, தீண்டாருக்குத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதை மறுக்கும் ரகசியம்.

இரண்டு சந்தேகம்?

சித்திரபுத்திரன்.

1. போக்கிரி:- திருமதி ஸ்லேட்டர் அம்மாளை மீராபாயம்மாளாக்கி, முக்காடு போட்டு ஆபாசமாக்கி சீமைக்கு அழைத்துப் போய் இந்திய நாகரீகத்தைப் பாருங்கள் என்று வெள்ளைக்காரர்களுக்கு காட்டுகிறாரே அது ஏன்? முக்காடு என்ன அவ்வளவு அழகா? அல்லது, தன்னை ஒரு சனாதன இந்து என்பதற்காகவா?

அயோக்கியன்:- அதைப்பற்றிய கவலை உனக்கு ஏதற்கு? அது அவரவர்கள் இஷ்டத்தைப்பொறுத்தது.

போக்கிரி:—சரோஜனி அம்மாள் அப்படியில்லையே?

யோக்கியன்:— மறுபடியும் பேசுகிறாயே?

2. போக்கிரி:—சரி. அதைப்பற்றிபின்னால் பேசிக்கொள்ளலாம். திரு. காந்திக்கு திரு. ஏ. ரங்கசாமி அய்யங்கார் அவர்களின் யோக்கியதை தெரியுமா? தெரியாதா?

யோக்கியன்:—தெரியும். ஏன்?

போக்கிரி:—அவர் காந்தியை மீறித்தானே வட்டமேஜைக்குப் போனார்?

யோக்கியன்:—ஆம்.

போக்கிரி:—அப்படி இருக்க, திரு. காந்தி அவரை எதற்காகத் தனக்கு அரசியல் ஆலோசனை சொல்லும் அமைச்சராக வைத்துக்கொண்டார்.

யோக்கியன்:—இது வேண்டுமானால் நல்லகேள்வி. ஏன் வைத்துக்கொண்டார் என்றால், திரு. ஏ. ரங்கசாமி அய்யங்கார் 'இந்து' 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளின் ஆசிரியராய் இருக்கின்றார் என்பதற்காகத்தான். அன்றியும் திரு. ரங்கசாமி அய்யங்காரிடம் திரு. காந்தியின் கைவரிசை ஒன்றும் செல்லாது. ஏனெனில் இந்துபத்திரிகையென்றாலே திரு. காந்திக்கு எப்போதும் நெஞ்சில் கொஞ்சம் நெருப்பு உண்டு.

போக்கிரி:—அதெப்படி?

யோக்கியன்:—காலஞ் சென்ற ஒத்துழையாமையின்போது கூட இந்து பத்திரிகை ஒத்துழையாமைக்கு விரோதமாய் விஷமப் பிரசாரம் செய்தும் திரு. காந்தி அடிக்கடி அதன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதி அவரைக்கைக்குள் போட்டு, "ஒத்துழையாமையை தயவு செய்து கவனித்துக்கொள்ளுங்கள்" என்று கடிதமெழுதி இருக்கிறார். அன்றியும் 'இந்து'வும், 'சுதேசமித்திர'னும் சேர்ந்துதான் திரு. தாசுக்கு விளம்பரம் கொடுத்து அவரை 'தேசபந்து'வாக்கி 'மகாத்மாவை' தோற்கடித்து ஒத்துழையாமையைப் புதைத்துவிட்டதுகள். ஆதலால் அதுபோலவே இப்போதும் செய்துவிடுமோ என்கின்ற பயத்தால்தான் திரு. ரங்கசாமி அய்யங்காரை திரு. காந்தி தனது மந்திரியாக்கிக்கொண்டார்.

போக்கிரி:—மற்றவர்களையெல்லாம்விட திரு. ஏ. ரங்கசாமி அய்யங்காரிடம் மாத்திரம் என்ன அவ்வளவுபயம்?

யோக்கியன்:—'இந்து' 'சுதேசமித்திரன்' என்றால் பார்ப்பனர்கள் என்று அருத்தம். அதுவும் "தென்னாட்டு அய்யங்கார் பார்ப்பனர்கள்" என்று அருத்தம். திரு. காந்தியைப்போல் ஆயிரம் காந்தியை அய்யங்கார்ப்பார்ப்பனர்கள் ஆக்கவும்கூடும். அழிக்கவும்கூடும். திரு. காந்தி இவையெல்லாம் தெரியாதவரல்ல. யார்யாரைப்பிடித்து எப்படி எப்படி சரிபண்ணலாம். எப்படி எப்படி விளம்பரம் செய்யலாம் என்பதில் அவருக்கு அநுபோகமுண்டு. லார்டு இர்வினை 'மகாத்மா இர்வின்' என்று காந்தி கூப்பிட்டாரே எதற்கு? என்பது உமக்குத்தெரியுமா?

போக்கிரி:—சரி விளங்கிற்று இனிஒன்றும் தெரியவேண்டாம்.

புதிய தொண்டரும் பழைய தொண்டரும்.

புதுத் தொண்டர்:— வட்டமேஜை முறிந்து போனால் என்ன செய்வது? "ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டி வரும் என்றுகாந்திசொல்லுகின்றாரே."

பழய தொண்டர்:—அடபயித்தியக்காரா! வட்டமேஜை மகாநாடு முறிந்தால் தான் நமக்கு நல்லது.

பு. தொ:—அதென்ன அப்படி?

ப.தொ:—வட்டமேஜை மகாநாடு முறிந்து போனால், திரு. காந்தி இந்தியாவுக்கு வந்து, மறுபடியும் ஏதாவது சத்தியாக்கிரகம் - சட்டமறுப்பு - என்பதாக, எதையாவது ஒன்றைச்செய்யச் சொல்லுவார்.

பு - தொ:—அதனால் நமக்கென்ன லாபம்? ஜனங்களுக்கு கஷ்டம் தானே?

ப - தொ:—அட முட்டாளே! ஜனங்கள் எக்கேடு கெட்டேனும் தொலையட்டும், அதைப் பற்றி நமக்கென்ன கவலை? நமக்கு எப்படியும் ஒரு வேலை இருக்குமல்லவா? அதனால் உண்டி வசூலிக்கவோ, பணம் வசூல்செய்யவோ, தேசாபிமானியாகவோ, சவுகரியம் இருக்கும். அப்படியில்லாவிட்டால் நம்மை எவன் சட்டைபண்ணுவான்?

பு - தொ:—நமக்கு வேலை வேண்டியதற்காகவா தேசியத் தொண்டு செய்வது?

ப - தொ:—சரி! சரி! உனக்கு ஒன்றும் தெரியாது உங்கள் வீட்டில் ஏதோ சோற்றுக்குக் கொஞ்சம் வகை இருக்கின்றது போல் தெரிகிறது. அதனால் உனக்கு வட்டமேஜை முறிய வேண்டிய அவசியமில்லை யென்று தோன்றுகின்றது.

பு.தொ:—அதென்ன அப்படி சொல்லுகின்றாய்?

ப.தொ:—வட்டமேஜை ஏதாவது ஒரு வழியில் வெற்றி பெற்றுவிட்டால், இந்தியாவில்வேலையில்லாக் கஷ்டம் எவ்வளவு அதிகரிக்கும் தெரியுமா? முக்கால்வாசிப் பத்திரிகைகள் ஒழிந்து போகும். முன்பெல்லாம் பாமரமக்களை ஏமாற்ற மதம் ஒன்றுதான் இருந்தது. இப்போது நமது பிராமணப் பெரியோர்கள் தயவினால் தேசியம் என்பதாக ஒன்று ஏற்பட்டு, இதில் அனேகம் பேருக்கு ஜீவனோபாயம் உண்டாயிற்று. மகாத்மா காந்தி அதற்குத் தண்ணீர் ஊற்றிவளர்த்து வருகின்றார். அதனால் இப்போது நம்போலியர்க்கெல்லாம் சோற்றுக்குச்சோறு, துணிக்குத்துணி, கைச்செலவுக்குத் தாராளமாகக் காசு இவ்வளவும் தவிர, போகிற பக்கம், வருகின்ற பக்கம் எல்லாம் திருப்பதி குடை யாத்திரைக்காரருக்கு காலில் தண்ணீர் விட்டு, விழுந்து கும்பிட்டு, தட்டத்தில் காசு போடுகின்ற மாதிரியான மரியாதை-இவ்வளவெல்லாம் இருக்கின்ற போது, இவை அத்தனையும் ஒழிந்து போகின்ற மாதிரியில் "வட்ட மேஜை வெற்றி பெற்றால்" என்று கேட்கின்றாயே, பாவி! இதைக் கேட்டதும் எனக்குத் திகீர் என்கிறது.

பு - தொ:—கோபித்துக்கொள்ளாதீர்கள்! எனக்கு அநுபோகம் இல்லாததினால் இப்படிக் கேட்டேனே ஒழிய, உங்கள் பிழைப்பில்நான்கைவைக்கவில்லை.

சத்தியாக்கிரகமும் தடையும்.

கேள்வி:—"சத்தியாக்கிரகம்" என்பதை குற்றம் சொல்லுவதின் காரணம் என்ன?

விடை:—சத்தியாக்கிரகம் என்கின்ற வார்த்தையில் மனிதத்தன்மைக்கு மீறினதான, ஏதோ ஒரு 'தெய்வீக' சக்தி இருப்பதான கருத்து இருக்கின்றபடியால், தெய்வத்தன்மையென்பதை ஒப்புக்கொள்ளாதவன் சத்தியாக்கிரகத்தை ஒப்புக்கொள்ளமுடியாது.

கேள்வி:—அப்படியானால் முழுச்சுயமரியாதைக்காரர்கள் என்பவர்கள்கூட சத்தியாக்கிரகம் செய்கின்றார்களே அதன் அருத்தம் என்ன?

விடை:—பசிக் கொடுமையால் உலகில் நடக்கும் எத்தனையோ விதமான அற்புதமல்லாதவைகளில் சுயமரியாதைக்காரர் என்பவர்கள் சத்தியாக்கிரகம் செய்கின்றார்கள் என்பதும் சேர்ந்ததாகும். 'யாரைவிட்டதுகாண் பசிக்கொடுமை எவரை விட்டது காண்' என்பதும், 'பசிவந்திடப் பத்தும்பறந்து போம்' என்பதும் இதில் சேர்ந்தவைதான்.

கேள்வி:—'மகாத்மா' காந்தி எத்தனையோ காரியத்திற்கு சத்தியாக்கிரகம்செய்கின்றாரே! இந்த தீண்டாமைக்கு ஏன் சத்தியாக்கிரகம் செய்வதில்லை?

விடை:—அவர் தீண்டாமை விலக்குவதில் சத்தியம் இருக்கின்றதா இல்லையா என்பதில் இன்னமும் முடிவு காணாமல் இருக்கின்றார். ஆதலால்தான் தீண்டாமை ஒழிப்பதற்கு சத்தியாக்கிரகம் செய்யும் விஷயத்தில் பயப்படுகிறார்.

கேள்வி:—அப்படியானால் வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு அவர் எப்படி உதவி செய்தார்?

விடை:—வைக்கம் சத்தியாக்கிரகம் திரு. காந்தி ஆரம்பித்ததல்ல. மற்றவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். 'நம்பிக்கை இருக்கின்றவர்கள் செய்யுங்கள்' என்று அநுமதி மாத்திரம் கொடுத்துவிட்டார்.

கேள்வி:—வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு "மகாத்மா" பணம் கூட கொடுத்தாரே.

விடை:—ஆம். அந்தப் பணம் கொடுத்தது எதற்கென்றால், வைக்கம் சத்தியாக்கிரகத்தை நடத்த பஞ்சாப்பில் இருந்து சீக்கியர்கள் பதினாயிரக்கணக்கான ரூபாய்களுடன் வந்து விட்டார்கள். அவர்களைக் கொண்டு சத்தியாக்கிரகம் நடந்தால் ஜனங்கள் சீக்கியர்கள் ஆய்விடுவார்களே என்று கருதியும், மற்றும் பணம் தாராளமாய் இருந்தால் தீண்டாமை விலக்குக்கு நினைத்த இடங்களில் எல்லாம்சத்தியாக்கிரகம் தொடங்கப்பட்டு விடுமே என்று பயந்தும், சீக்கியர்களை திரும்பிப் போகும்படி செய்துவிட்டார். அதனால் சிறிது உதவி செய்ய வேண்டியதாயிற்று.

குடி அரசு

ஈரோடு 1931 நவம்பர் 15௳

மக்களே! பார்ப்பனீயம் ஜாக்கிரதை!!

—:0:—

BEWARE OF BRAHMINISM.

தென் இந்தியாவில் உள்ள பார்ப்பனர்கள் மறுபடியும் கதர், காங்கிரஸ், மறியல் என்னும் பெயர்களைச் சொல்லி மூடமக்களிடம் உண்டியல்பிச்சை, தட்டுப்பிச்சை முதல் பல தந்திரங்களால் பணம் வசூலிக்க வழிகளுண்டாக்கி, பார்ப்பனரல்லாதாரையே கூலிகளாகப் பிடித்து அவர்கள் வசம் அம்மார்க்கத்தை ஒப்புவித்து கூப்பாடு போடச்செய்து, பிரசாரம் செய்ததின் பயனாய் அடங்கிக்கிடந்த பார்ப்பனீயம் இப்போது மறுபடியும் தலைவிரித்து ஆடத்தொடங்கி இருக்கிறதென்பது யாவரும் அறிந்ததேயாகும்.

பார்ப்பனீயத்தின் கருத்தெல்லாம், தேசம் பார்ப்பனர்கள் ஆதிக்கத்திற்கு வரவேண்டுமெனபதைத் தவிர வேறு ஒரு காரியமும் இல்லை என்பதும் வெகுகாலத்திற்கு முன்பே விளங்கிய விஷயமாகும். அதற்காக, என்று செய்யப்படும் கதர்--காங்கிரஸ்--மறியல் முதலிய பிரசாரத்தின் கருத்தெல்லாம் சட்டசபை, தாலூகா, ஜில்லாபோர்டுகள் முனிசிபாலிடி முதலியவைகளை பார்ப்பனரல்லாதாரிடமிருந்து பிடுங்கிபார்ப்பன ஆதிக்கவசமாய் ஒப்புவிக்கும் தரகர்வேலையென்பதைத் தவிரமற்றபடி இவற்றால் எல்லாம் மதுபானமோ ஏழ்மைத்தன்மையோ, அடிமைத்தன்மையோ ஒழியப்போவதில்லை என்பதும் நிச்சயமான உண்மையாகும்.

“தேன் அழித்தவன் புறங்கை நக்கமாட்டானா” என்பதுபோல் “பார்ப்பனர்களுக்கு போகமுடியாத சமயத்தில் ஒன்று அரை உத்தியோகமோ, ஸ்தானமோ நமது கைக்கு வராதா” என்று எண்ணுகின்ற தொண்டர்களும் சிலர் இருக்கலாம் என்றாலும்பார்ப்பனரல்லாத மக்கள் இது சமயம் ஏமாந்தால் கடைசியில் ஆபத்தாய் முடியும்.

உதாரணம் வேண்டுமானாலும் நிதானமாய் யோசித்துப்பார்த்தால் விளங்கும். இப்போது, முனிசிபல்எலக்ஷனும், தாலூகா, ஜில்லாபோர்ட் எலக்ஷனும் சமீபித்த உடனே எத்தனை “வரி செலுத்துவோர்” சங்கம், “நகர நல உரிமை”ச்சங்கம், “குடியானவர்கள்” சங்கம், “ரோட்டில் நடப்பவர்கள்” சங்கம், “ரயிலில் பிரயாணம் செய்கின்றவர்கள்” சங்கம், “மதுவிலக்கு” சங்கம், “சுகாதார” சங்கம், “தொழிலாளிகள்” சங்கம், “உழுது பயிர்செய்வோர்கள்” சங்கம். “வேலையற்றவர்கள்” சங்கம் என்பவைகளாதிய அநேக சங்கங்கள் புறப்பட்டுவருகின்றதை கவனித்துப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும்.

1920-ஷத்திய சீர்திருத்தத்தின்போதும் சட்டசபைதேர்தலை உத்தேசித்துகிளப்பப்பட்டகாங்கிரஸ் கிளர்ச்சியானது, ஒத்துழையாமையில் ஆரம்பித்து, தேர்தல்கள் வந்தவுடன் சட்டசபைப் பிரவேசமாக மாறி எலக்ஷன் முடிந்த உடன் எல்லாமுமே அடங்கிப்போய்விட்ட சங்கதி யாவரும் அறிந்ததே. இப்போதும் அதுபோலவே 1931ம் வருஷத்தியசீர்திருத்தத்தைஎதிர்பார்த்து, சட்டசபை தேர்தல்களை உத்தேசித்து, ஒரு வருஷத்திற்கு முன்னால் இருந்தே போடுகின்ற கூச்சல்இதுஎன்பதைத் தவிர மத்தியில் இந்த 5, 6 வருஷங்களாய் ஏதாவது நடவடிக்கைகள் நடந்ததா என்பதை யோசித்துப்பாருங்கள். அன்றியும் இவற்றிற்கு மத்தியில் ஏற்பட்ட ஒரு தேர்தலின் போதும், சட்டசபை காலாவதி முடிவதற்கு “மூன்று நாள்” இருக்கையில் காலம் சென்ற “தேசபக்த சிகாமணி” மோதிலால் நேரு உள்பட, பல “தேசபக்த சிஷ்யர்கள்” “பின்பற்றுபவர்கள்” உள்பட அநேகர் சட்டசபையின் மீது “கோபித்து” ராஜிநாமா கொடுத்துவிட்டுவந்து, மறுபடியும் மூன்றுநாளில் அடுத்த காலாவதி தேர்தலுக்கு நின்றது முதலிய காரியங்களையும் யோசித்துப்பாருங்கள்.

இன்று தென் இந்தியாவிலுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்களின் தலைவர்கள் எல்லோருமே 100க்கு 90 பேர்களுக்கு மேலாகவே அந்த கூட்டத்தினரும், அதில் நேரில் கலந்து இருந்தவர்களும் பார்ப்பனர்களுமாகவே இருக்கின்றார்களா இல்லையா என்பதையும், மற்ற பொது “தேசிய” ஸ்தாபனங்கள், கூட்டங்கள் ஆகியவைகளின் தலைவர்கள் காரியதரிசிகள் ஆகியவர்களும் அநேகமாய் பார்ப்பனர்களா? அல்லவா? என்பதையும் யோசித்துப்பாருங்கள்.

மற்றும் காங்கிரசின் பெயரைச்சொல்லிக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் என்கின்ற முறையில் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போயிருக்கும் பிரதிநிதிகளும் பார்ப்பனர்களா? அல்லவா? என்பதையும் யோசித்துப்பாருங்கள்.

கடைசியாக சென்னை மாகாண காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸ் மகாநாட்டுத்தலைவர்களும் பார்ப்பனர்களா? அல்லவா? என்பதையும் யோசித்துப்பாருங்கள். இவைகளை எடுத்துக்காட்டுவது வாசகர்களுக்கு ஒரு சமயம் பார்ப்பனத்துவேஷமாய் காணப்பட்டாலும் படலாம்; என்றாலும் தொண்டர்கள் என்பவர்கள் மாத்திரம் 100க்கு 90 பேர்கள் பார்ப்பனரல்லாதார்களா? அல்லவா? என்பதையும், அத்தொண்டர்களின் ஜீவனம் பெரிதும் அக்காங்கிரஸ் சம்மந்தத்தின் பேரிலேயே இருக்கின்றதா? இல்லையா? என்பதையும், இத்தொண்டர்களுக்கு காங்கிரசினால் ஜீவனம் இல்லாவிட்டால் இவர்கள் அங்கு இருப்பார்களா? என்பதையும், இவர்கள் காங்கிரசின் மூலம் ஜீவிப்பதைத் தவிர வேறு வழியில் பாடுபட்டுப் பிழைக்க 100க்கு 10பேராலாவது முடியுமா? என்பதையும் யோசித்துப்பாருங்கள்.

மற்றும் ஒரு விஷயத்தையும் யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம். அதென்னவென்றால்:--- பார்ப்பனர்களில் வக்கீல்கள், டாக்டர்கள், மிராசுதார்கள், வியாபாரிகள் முதலியவர்களே காங்கிரசில் தலைவர்களாயிருக்கவும், பார்ப்பனரல்லாதார்களில் வக்கீல்கள், டாக்டர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்கள் அதுபோல் காங்கிரசில் சேராமலிருக்கவும் காரணம் என்ன? பார்ப்பனரல்லாத வகுப்போ, ஜாதியோ, அதாவது வயிற்றுப் பிழைப்பை காங்கிரசின் மூலம் நடத்துகின்றவர்கள் தவிர மற்ற பார்ப்பனரல்லாதார் சமூகமே ‘தேசத்துரோகிகளா’? அல்லது ‘குலாம்களா’? அல்லது ‘நக்கிபொறுக்கிகளா’? என்பதை யோசித்துப்பாருங்கள்.

திருவாளர்கள் ஏ. ரங்கசாமி அய்யங்கார், சத்திய மூர்த்தி, சி. வி. வெங்கட்டரமணய்யங்கார், பஷ்யம் அய்யங்கார், ராஜகோபாலாச்சாரி, டாக்டர் ராஜன், மகாலிங்கய்யர் ஆகியவர்களுக்கு இருக்கும் “சுயராஜ்யதாகம்” “சமதர்ம உணர்ச்சி” முதலியவைகள் திருவாளர்கள் வெரிவாட செட்டியார், இரத்தினசபாபதி முதலியார், டாக்டர் நடேசமுதலியார், தம்மண்ண செட்டியார், குமாரசாமி செட்டியார், காயாரோகணம் பிள்ளை முதலியவர்களுக்கு ஏன் இல்லை. முற்கூறியவர்களெல்லாம் மாத்திரம் தான் யோக்கியர்கள், நாணயக்காரர்கள், தேசபக்தர்கள், தியாகமூர்த்திகள் ஆகியவர்களா? பிற்கூறியவர்களெல்லாம் மாத்திரம் அந்தப்படி அல்லாதவர்களா? அல்லது தேசத்தின்பேரால் பணம் சம்பாதித்து அதனால் சாப்பிட்டுக்கொண்டிருப்பவர்களா?

இவைகள் ஒருபுறம் இருந்தாலும், இன்று தமிழ் நாட்டு காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவரிடமாவது, காங்கிரஸ் கமிட்டித்தலைவரிடமாவது இன்று காங்கிரசில் வேலை செய்யும் காங்கிரஸ் தொண்டர்கள் அல்லது பக்தர் என்பவர்களில் 100க்கு 5 பேருக்காவது நம்பிக்கையோ அல்லது மரியாதையோ இருக்கின்றதா? என்று காங்கிரஸ் பக்தர்களையும் தொண்டர்களையும் கேட்டுப்பாருங்கள். பார்ப்பனரல்லாத தொண்டர்கள் ஒவ்வொருவரும் அவர்களிடம் அடியோடு நம்பிக்கை இல்லை என்றுதான் சொல்லுவார்கள், சொல்லுகிறார்கள்.

அப்படியிருக்க அவர்களைத்தலைவர்களாக்கியதும், தலைவர்களாகக் கொண்டாடுவதும், அவர்களது தலைமையில் தொண்டாற்றுவதுமான காரியம், வெறும்--பரிசுத்தமான வயிற்றுப்பிழைப்பு நாடகமாக இராமல், கடுகளவாவது நாணயமோ, சுயமரியாதையோ உடைய தேசியமாகவோ, தேசபக்தியாகவோ இருக்க முடியுமா? என்று நன்றாய் யோசித்துப்பாருங்கள்.

சைவ மடங்களில் வெட்டிச் சோறு இல்லாவிட்டால் அங்கு எப்படி நூற்றுக்கணக்கான மொட்டைப்பண்டாரங்கள் இருக்க முடியாதோ அதுபோலவே காங்கிரஸ் பெயரைச்சொல்லி வயிறு வளர்க்க இடம் இல்லாவிட்டால் இன்று இத்தனை தேசபக்தர்கள், தேசிய வீரர்கள், தொண்டர்கள் காங்கிரசிலிருந்து “தொண்டாற்ற” முடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

அன்றியும் இன்று காங்கிரசில்

வயிறு வளர்ப்பவர்களில் 100க்கு 90 பேர் இதில் வந்து சேர்வதற்கு முன் ஏதாவது நாணயமான, கௌரவமான தொழிலில் ஈடுபட்டு தாராள முறையில் சுதாவில் வயிறு வளர்த்தார்களா என்றாவது யோசித்துப்பாருங்கள்.

எங்கோ இரண்டு ஒன்று மூலையிலுள்ள கோளாறுலோ வேறு காரியங்களை எதிர்பார்த்தோ இந்தக்கூட்டத்தில் சேர்ந்திருப்பதாலேயே அவர்களை உதாரணமாகக் கொண்டுவராதீர்கள். அதிகம்பெயர்களின் யோக்கியதைகளையே கவனித்துப்பார்க்க விரும்புகிறோம்.

இவற்றை யெல்லாம் "குடி அரசு" ஆரம்பித்தகாலத்திலேயே பக்கம் பக்கமாய் எழுதியிருந்தாலும், மேடை மேடையாய்க் கூப்பாடு போட்டிருந்தாலும்இப்போதும் அதை ஏன் திருப்புகிறோம் என்றால், உண்டியல் காசில் வயிறு வளர்த்துக்கொண்டு, மேடையேறி கள்ளு, சாராயக் கடைகளில் குடிகாரர்களும், கீழ் மக்களும், வெறிகாரர்களும் பேசுவது போல் வாயில் வந்தபடி மற்றவர்களைப் பேசும் இழிதன்மையின்யோக்கியதையையும்காரணங்களையும்மக்களுக்கு எடுத்துக் காட்டவே நாம் எழுதநேரிடுகின்றது.

"காங்கிரஸ் தொண்டர்கள்" என்பவர்கள், காந்தி பக்தர்கள் என்பவர்கள், அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடித்தவர்கள் என்பவர்கள் வெளிப்படையாய்தேர்தல் கூலிகளான பிறகும், கூலிக்கு மற்றவர்களை வையத் தொடங்கிய பிறகு அவர்களது யோக்கியதையை பொதுஜனங்களுக்கு வெளிப்படுத்தாமல் இருக்கமுடியவில்லை.

காந்தியைக் கும்பிடுவதிலோ, அவர்மீது புகழ்மாலை பாடி ஜீவனம் செய்வதிலோ நமக்கு பொறாமையில்லை. கல்லைக்கும்பிட்டு அதன்மீதுபுகழ்மாலை பாடிஅதன் பெயரைச்சொல்லிக் கொண்டுவயிறுவளர்க்கும்முட்டாள்தனத்தை விட, இதை நாம் அதிகமாக குற்றம் சொல்லவரவில்லை. ஆனால் அதற்காக தேர்தலில் ஏன் பிரவேசிக்க வேண்டும்? என்றுதான் யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம்.

ஏற்கனவே "இருக்கின்றவர்களைவிட இவர்கள் தாகர்களாயிருந்து வேலை செய்வதன் மூலம் கொண்டுவந்து நிறுத்தப்படுபவர்கள் எந்த விதத்தில் யோக்கியர்கள், நாணயமானவர்கள் என்று சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம். தொண்டர்களுக்கு கூலி கொடுத்து, அல்லது கூலி கிடைக்கச்செய்து மற்றவர்களைவாய்கொண்டமட்டும் வையச்சொல்லுகின்றார்கள் என்பதைத்தவிர வேறு என்ன அதிகமான யோக்கியதை இருக்கின்றவர்களுக்கு இவர்கள் கங்காணிகளாய்இருக்கின்றார்கள்?

எந்த காங்கிரஸ்-கதர்-மறியல் தொண்டருக்கும் தேர்தலைப்பற்றிப் பேசவும், பார்ப்பனரல்லாத பிரமுகர்களைப்பற்றி வசைபாடவும் என்ன அவசியம் இருக்கின்றது? சர்க்காரரை வைதுவிட்டுவயிறுவளர்ப்பதில் நமக்கு அக்கரையில்லை. மற்றபடி தேர்தல் ஸ்தாபனங்களில் இருக்கும் நபர்களைப் பற்றி பேசவேண்டிய காரியம் எதற்கு? அதுவும் பார்ப்பனர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, எதிர் அபேக்ஷகர்களிடம் கூலி வாங்கிக்கொண்டு பேசுவது என்றால் யார் சகிப்பார்கள்? அந்தப்படி எதற்காக சகித்துக்கொண்டு இந்த இழிவான வேலையில் ஒரு கூட்டம் பிழைப்பதை பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும் என்பதும் நமக்குத் தெரியவில்லை.

மனிதர்களுடைய சொந்த குணங்களின் உண்மையை இருபுறமும் சொல்லுவதைப் பற்றி நமக்கு சங்கடம் இல்லை. ஆனால், அவர் அந்தக்கக்ஷிக்காரர் இந்தக்கக்ஷிக்காரர் என்றும் காங்ரஸ்கக்ஷிக்காரர் அல்லஎன்றும்சொல்லுவதனால் அதில் நாணயம் உண்டா என்றும் பாருங்கள்.

காங்கிரஸ் கக்ஷிக்காரர் என்றால் என்ன அருத்தம்? "தொண்டர்களுக்கு" சோற்றுக்கு கொடுக்கின்றவர் என்பதைத்தவிர வேறு என்ன விதமான நல்ல அபூர்வ-பொது நன்மைகரு-ஏற்ற நாணயமான குணம் இருந்தது-இருக்கின்றது-இருக்கும் என்று சொல்ல முடியும்? அளவுக்கு மிஞ்சினால் எதுவும் கெடுதி என்பதை உணராமல் மக்கள் எல்லோரையும் மூடர்கள் என்று எண்ணிக் கொண்டு வேலை செய்வது என்பது என்றைக்கானாலும் ஒரு நாளைக்கு வெளியாக்கப்படவேண்டியதாய் தான் முடிகிறது.

ஆதலால் பொது ஜனங்கள் பார்ப்பன தந்திரத்தைக் கண்டும், பார்ப்பனக் கூலிகளின் நாடகத்தைக்கண்டும் ஏமாந்துபோகக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

நிற்க பல "தேசபக்தர்கள்" தாங்கள் ஜெயிலுக்குப் போய் விட்டு வந்ததை பிரமாதமாகப் பேசி மக்களை ஏய்க்கின்றார்களாம். அனேகருக்கு வீட்டுச்சாப்பாட்டை விட இப்போதைய ஜெயில் சாப்பாடு நல்ல சாப்பாடு என்பதையும், வீட்டிலிருப்பதை விட அங்கு சௌக்கியம் அதிகம் என்பதையும், யாவரும் அறியாமல் இல்லை. இதற்கு மற்றொரு உதாரணமாக 5.11.31ந் தேதியின் "இந்தியா" வாரப்பத்திரிக்கையில் உண்மையில் நடந்ததாக எடுத்துக்காட்டியிருக்கும் ஒரு விஷயத்தை குறிப்பிடுகின்றோம். அதாவது, 'வேலையில்லா திண்டாட்டத்துக்கு பரிகாரம்' என்ற தலைப்பின்கீழ்.

"ஒரு அதிகாரி ஒருவனுக்கு 12 மாதம் தண்டனை விதித்தார். அதற்கு எதிரி பிரபுவே உமக்கு வந்தனம் எனது கஷ்டத்தை கொஞ்சகாலத்திற்குத் தீர்த்து வைத்தீர்கள். என்னைப்போல் வேலையில்லாமல் திண்டாடும் ஒவ்வொருவரும் இதை அடைவது நலம் என்று சொல்லி அதாவது (ஒரு வருஷத்திற்காவது தனக்கு சாப்பாட்டிற்கு வழி யேற்பட்டதே என்று) சந்தோஷப்பட்டான் என்பதாகும்.

இந்தபடி விஷயங்களைப்பச்சையாய் எடுத்துச் சொல்லுவதில் சிலருக்குச் சங்கடம் இருக்கலாம். உண்மையாய், யோக்கியமாய் வேலை செய்கின்ற தொண்டர்களைப்பற்றி நாம் யாதொன்றும் கற்பிக்கவரவில்லை. அப்படிக்கில்லாமல் மேல் கண்டபடி யெல்லாம் பேசுவதும், உண்மைக்கு விரோதமாக துவேஷபுத்தியுடன் சுயநலத்துக்கு விஷமப் பிரசாரம் செய்வதும், மற்றும் ஒருவருக்கொருவர் உள்ள சொந்த மனஸ்தாபங்களில் புகுந்து ஒருவரிடம் கூலி வாங்கி மற்றவர்களை வைய உபயோகித்துக் கொள்வதுமான "தேச சேவை"யைக் கண்டிக்காமல் இருப்பது பயங்காளித்தனமாகும் என்பதோடு, ஒழுங்குக்கும் சமாதானத்திற்கும் பங்கமேற்படுத்துவதுமாகும் என்றே வெளிப்படுத்துகிறோம்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்லி இதை முடிக்கின்றோம். அதாவது:- இந்தமாதிரி "தேசியத்தொண்டர்"களை சுவாதீனம் செய்து, அவர்களை ஏவி விட்டு, தங்கள் பகைமைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் காரியம் செய்கின்றவர்களுக்கு, இன்று சற்று சந்தோஷமாயிருப்பதாகக்காணப்படலாமே ஒழிய, நாளைக்கு இதே தொண்டர்களை சற்று அதிககூலி கொடுத்து வாங்கி,இவர்கள் மீதே உசுப்படுத்திவிடுவது என்பது பிரமாதமான காரியம் அல்லவென்பதை நினைவிலிருத்தும்படிதெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

C. S. R.
படத்திறப்பு விழா.

கோவைநகரசபை சேர்மனும், ஜில்லா போர்டு பிரசிடெண்டும், சட்டசபை அங்கத்தினருமான திவான்பகதூர் சி எஸ். இரத்தின சபாபதிமுதலியார் அவர்கள்உருவப்படத்தை ஈரோடு முனிசிபல் கவுன்சில் மண்டபத்தில் அலங்கரிக்கும் விழாவை நடத்திக்கொடுக்க கோவை ஜில்லா கலெக்டர் அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டிருப்பதாய் தெரிகின்றது. இம்மாதக் கடைசிக்குள் விழா நடைபெறலாம்.

ஒரு நிருபர்.

---

10 ரூபாய் இனாம்.

திரு. காந்தியின் முன்னுக்குப் பின் முரணான சங்கதிகள் என்று 1 மாதத்தில் 2000 வார்த்தைகளுக்கு அதிகமில்லாமல் தக்கவிஷயங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டி ஒரு வியாசம் எழுதியனுப்புகின்றவர்களுக்கு 10 ரூபாய் இனாம்.

பரிசுக்குத்தகுதியான வியாசம் என்று தீர்மானிப்பதற்கு திரு. சாமி சிதம்பரனார் உரிமையுள்ளவர். பரிசு வியாசத்தையும் பரிசு பெறாத வியாசத்தையும் பத்திரிகையில் பிரசுரிக்கவும், பிரசுரிக்காமல் நிறுத்திக்கொள்ளவும் திரு. சாமி சிதம்பரனாருக்கு உரிமை உண்டு.

"எவனெழுதினால் என்ன" என்பவரின் சமாதானம்.

சென்ற 25—10—31 'குடி அர'சில் "எவனெழுதினால் என்ன" என்பவர் "தீண்டாதாருக்கு விமோசனம்" என்று எழுதிய கட்டுரையில், ஆரம்பத்தில் "முகமதியரைத் தழுவுவதை விட வேறு கதியில்லை" என்றும், இறுதியில் "முகமதியரைச் சாருங்கள்" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வியாசத்தைக் கண்டதும் "புதுவை முரசு"ப் பத்திரிகையில், திருமதி "எவள் எழுதினால் என்ன" என்னும் சகோதரியார் "இந்து மதத்தைப் போலவே முஸ்லீம் மதத்திலும், திருவிழா, குருக்கள், புரோகிதம், சடங்கு

முதலிய பல மூடவழக்கங்கள் இருக்கும்போது அம்மதத்தை தழுவும்படி பகுத்தறிவு இயக்கத்தாராகிய சுயமரியாதைக்காரர் கூறலாமா?" என்ற கருத்தடங்கிய சந்தேகம் கேட்டிருந்தார்.

இதைப்பார்த்ததும் நாம் "எவனெழுதினால் என்ன" என்பவருக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்தோம். அவர் "நான் அந்த வியாசத்தைப் பொறுத்தவரை முஸ்லீம் மதத்தைத் தழுவும்படி குறிப்பிடவில்லையென்றும், அரசியல்விஷயத்தில், தனி உரிமையும் பாதுகாப்பும் பெற முஸ்லீம் கட்சியை ஆதரித்து, அவர்களோடு சேர்ந்து எதிரிகளிடம் போராட வேண்டும் என்பதுவாகத் தான் அவ்வியாசத்தில் "முகமதியரைத் தழுவுவதைவிட வேறு கதியில்லை." என்று முதலிலும், "முகமதியரைச் சாருங்கள்" என்று இறுதியிலும் எழுதப்பட்டது என்று தெரிவிக்கிறார். (ப-ர்.)

பழைய-புதிய காந்தி.

தீண்டாமை ஒழியாமல் சுயராஜ்யம் பெற நினைப்பது முட்டாள்தனமும், முடியாத காரியமுமாகும் என்பதோடு முடிந்தாலும் அது சரியான சுயராஜ்யமாகாது. (பழைய காந்தி)

சுயராஜ்யம் கிடைத்து விட்டால் தீண்டாமை விஷயம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். (புதிய காந்தி)

சுயராஜ்யம் இல்லாமல் போனதற்கு காரணம் இந்து முஸ்லீம் ஒற்றுமை இல்லாததே யாகும்.

இந்து முஸ்லீம் ஒற்றுமையில்லாமல் சுயராஜ்யம் வாராது, வந்தாலும் இந்தியா இரணகளமாகி விடும். (பழைய காந்தி)

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குத் தடையாயிருப்பது அன்னிய ராஜாங்கமேயாகும். முதலில் சுயராஜ்யம் பெற்றுவிட்டால் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ளலாம். (புதிய காந்தி)

இந்து மதத்திலிருந்து விலக வேண்டுவது ஏன்?

ஆயிரக் கணக்கான கடவுள்களையும், கோடிக் கணக்கான தேவதூதர்களையும், (அவதாரங்களையும், ஆழ்வார்களையும், நாயன்மார்களையும்) நம்பியிருக்கும்மூடர்களைத் திடீரென்று எல்லா நம்பிக்கையையும் விட்டு விடுங்கள் என்றால் அவர்கள் சுலபத்தில் விடமாட்டார்கள். ஆதலால் அப்படிப் பட்டவர்களை முதலில் ஒரு கடவுள் தவிர வேறு கடவுள்கள் இல்லை என்றும், ஒரு ஆழ்வாரை-தேவதூதனைத் தவிர வேறு ஆழ்வார்கள்--தூதர்கள் இல்லையென்றும்சொல்லும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்தால் பிறகு அதிலிருந்து கடவுள் புரட்டையும், தூதர் புரட்டையும் ஒழிக்கச் செய்வது சுலபமான காரியமாகி விடும். ஆதலால் எந்தக் காரணத்தை முன்னிட்டாவது முதலில் பலகடவுள் எண்ணத்திலிருந்து மக்களை விலகும்படி செய்ய வேண்டியது அவசியமாகும். (ஆஸ்திகன்)

மூன்று விளக்குகள்.

1. தேசீயம்.

தேசியம் என்பது ஏழைகளையும் பாமர மக்களையும் ஏமாற்றி பணக்காரனாகவும் மேல் ஜாதிக்காரனாகவும் ஆவதற்குக் கண்டு பிடிக்கப்பட்ட சூழ்ச்சியேயாகும்.

2. காங்கிரஸ்.

இந்திய தேசிய காங்கிரஸ் என்பது வக்கீல்களாலும், பணக்காரர்களாலும், பார்ப்பனர்களாலும், படித்து விட்டு உத்தியோகம் சம்பாதிக்கக் காத்திருக்கும் ஆட்களாலும் உண்டாக்கப்பட்டஒரு சுயநல படிக்கட்டு ஸ்தாபனமாகும்.

3. தேச சேவை.

தேச சேவை என்பது வேறு வழியில் பாடுபட்டு ஜீவிக்க யோக்கியதையற்ற சோம்பேரிகள் வாழ்வதற்காகச் செய்யப்படும் கடைசித்தரமான யோக்கியப்பொறுப்பற்ற காரியமாகும். (பட்டதைச் சொல்லுவோன்)

தெரிவிப்பு.

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் உடல் மெலிவினால் இப்போது ஒரு நிமிஷம் சேர்ந்தாற்போல் ஏதாவது விஷயத்தைப் பற்றிப் பேசினால் தொண்டை சப்தம் குறைந்து இளைப்பு எடுக்கின்றது. எதையாவது இரண்டு மூன்று நிமிஷம் சேர்ந்தாற்போல் எழுதினாலும், படித்தாலும் உடனே தலைவலியும் மயக்கமும் உண்டாகி விடுகின்றன. ஆகாரம் மிகச் சிறு சிறு அளவே சாப்பிடவேண்டியிருக்கிறது. சற்று அதிகமாகச் சாப்பிட்டால் வயிறு வலிக்கின்றது. ஆகையால், அவர் வெளியில் இருந்து ஓய்வெடுத்துக்கொள்ளுவதால், "குடி அரசு" பத்திரிகை ஆசிரியர் பொறுப்பை திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் கவனித்து வருகின்றார். குறைந்தது 2, 3 மாதகாலமாவது சந்தாதாரர்களும், வாசகர்களும் பத்திரிகையை ஆதரித்து திரு. சாமி சிதம்பரனாரவர்களை உற்சாகப்படுத்தி வைக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஈ. வே. ரா. நாகம்மாள்.

—:0:—

அறிவிப்பு.

ஈரோடு முனிசிபல் 12 வார்டாகிய ரயில்வேஸ்டேஷன் வார்ட் எலக்ஷனில் ஒரு அபேக்ஷகராய் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட உயர் திரு. பட்டக்காரரவர்கள், மற்றொரு அபேக்ஷகராகிய ஜனாப் சுல்த்தான் சாயபு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி தனது அபேக்ஷக ஸ்தானத்திலிருந்து விலகிக்கொண்டதாகத் தெரிவிக்கிறார். அபேக்ஷகர் சட்டப்படி விலகிக்கொள்ளவேண்டிய காலம் கடந்து விட்டதால் தேர்தல் அவசியம் நடந்தே தீரும். ஆகையால் ஓட்டர்கள் ஜனாப் சுல்த்தான் சாயபு அவர்களையே தேர்தலில் ஆதரிக்கவேண்டுமென்றும் தெரிவிக்கிறார்.

மேலும் தனக்கு ஆதரவு அளித்த ஓட்டர்களுக்குதன்நன்றி அறிவைத்தெரிவித்துகொள்ளுகிறார்.

ஆதிதிராவிடர் மகாநாடு.

கோயமுத்தூர் ஜில்லா காங்கேயத்தை அடுத்தவெள்ளகோவிலில் இரண்டாவது ஆதிதிராவிடர் மகாநாடு இம்மாதம் நடைபெறும்.

மகாநாட்டுத்தலைவர் ராவ்சாகிப் வி. ஐ முனிசாமிப்பிள்ளையவர்களாகும்.

மகாநாட்டின் திறப்பாளர் இந்திய சட்டசபையின் உபத்தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ. அவர்களாகும். அத்துடன் ஆதிதிராவிட வாலிபர் மகாநாடு நடைபெறும். அதற்கு சாமி சகஜானந்தம் M.L.C. அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

மகாநாட்டிற்கு திருவாளர்கள் சென்னை என். சிவராஜ், கோவை ஆர். வீரையன், ஆகியவர்களும் மற்றும்பல பிரபலஸ்தர்களும் வருவார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குறிப்பு.

அடுத்த வாரம் "கடவுளும்—பிரபஞ்சமும்" என்னும் தலைப்பில் சென்னை திருவாளர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை பிரசுரிக்கப்படும்.

சென்னைஜில்லா சுயமரியாதை மகாநாடு.

வரவேற்புக்கமிட்டிக் கூட்டம்.

சென்னை சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டிக் கூட்டம் நவம்பர் 8ந் தேதிமாலை 5 மணிக்கு மலையப்பெருமாள் தெரு 3-வது நெம்பர் மாடியிலுள்ள 'சமதர்ம ஹாலில், தோழர் எஸ். குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள், மகாநாட்டை நவம்பர் மாதம் 29 தேதி சென்னையில் கூட்டுவதென்று முடிவு செய்யப் பெற்றது.

மகாநாட்டுத்தலைவராக தோழர்கள் ஆர். கே. ஷண்முகம், பி. சிதம்பரம், ஏ. முத்தையா, ஈரோடு காமாக்ஷி அம்மாள் எம். ஏ., எல். டி., எம். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., லக்ஷ்மி நரசு, இந்திராணி பாலசுப்பிரமணியம் ஆகியவர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பெற்றது.

மகாநாட்டுக் காரியதரிசிகளாக தோழர்கள் வி. பி. எஸ். மணியர், எஸ். பி. ரெத்தினசாமி ஆகியவர்களையும்.

மகாநாட்டுப் பொக்கிஷதாராக 'திராவிடன்' ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்களையும்.

மகாநாட்டு விளம்பர அதிகாரிகளாகத்தோழர்கள் எம். முருகேசப், எஸ். வி. லிங்கம் ஆகியவர்களையும் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

மகாநாட்டு இடம், தலைவர் முதலிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு கமிட்டி நியமித்து அதற்குப்பத்து அங்கத்தினர்களைக் குறிப்பிட்டு அவர்கட்கு அதிகாரம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பெற்றபின் கூட்டம் முடிந்தது.

ரோஜா முத்தையா
ச்சி நூலக அறக்கட்டளை

திரு. கிரன்தாஸ் வழக்கு.

கல்கத்தாவிலிருந்து வந்து கள்ளிக்கோட்டையில் பிரசங்கம் செய்ததற்காக ஜாமீன் கேஸ் தொடுக்கப்பட்ட திரு. கிரன்தாஸ் வழக்கு 13ந் தேதி கள்ளிக்கோட்டையில் விசாரிக்கப்பட்டது. ஈரோட்டிலிருந்து, திருவாளர்கள் கேசவலால்சேட்டி, எம். நரசிம்மாச்சாரியார், ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் ஆகியவர்கள் டிபன்சு சாக்ஷியாக சென்றார்கள். 14ந் தேதி ஊர்க்கு மெண்டுக்கு போட்டிருக்கின்றது.

திரு. நரசிம்மாச்சாரியார் அவர்கள் திரு. கிரன்தாஸ் அவர்கள் ஈரோட்டில் பேசியதிலிருந்து அங்கு வந்திருந்த மக்களுக்கு சர்க்காரார்மீது எவ்வித துவேஷமோ, வெறுப்போ ஏற்படவில்லை என்பதாக சாக்ஷி சொன்னார். முடிவு அடுத்தவாரம் எதிர்பார்க்கலாம் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சட்டமெம்பர், கனம். கிருஷ்ணன் நாயர்.

சட்ட மெம்பர் கனம் கிருஷ்ணன் நாயர் 6-11-31ல் திருச்சிக்கு வந்து சேர்ந்தார். உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர் அல்லாதார்கள் பலரும் வரவேற்றனர். அவர் அன்று மாலை 4—30 மணிக்கு ஜில்லா ஜட்ஜு கோர்ட்டில், ஜில்லா செஷன் ஜட்ஜு, திரு. ஆர். ஹெச். கோர்ட்னி துரை அவர்களின் படத்தை திறந்துவைத்தார்.

7-11-31 மாலை 5 மணிக்குத் திருச்சி எலக்ட்ரிக்பவர் ஹவுசைப் பார்வையிட்டார். பிறகு 7-மணிக்கு செயின்ட் ஜோசப் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்குச் சென்று தலைமை வகித்தார்.

8-11-31 காலையில், கனம் சட்டமெம்பர் திருச்சியிலிருந்து, திருவாளர்கள், டி. எம். நாராயணசாமி பிள்ளை, டி. வி. சோமசுந்தரம் முதலியவர்களுடன் லால்குடிக்குச்சென்று தாலூகா போர்டுக்கட்டிடத்தைத் திறந்துவைத்தார். பிறகு அங்கிருந்து குளித்தலை தாலுக்காவுக்குப் பிரயாணமானார்.

சட்டமெம்பரும் தொழிலாளரும்'

9-11-31ல் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களை, தெனிந்திய ரயில்வேதொழிலாளர் மத்தியசங்கத்தின்சார்பாக டி. வி. கே. நாயுடு, டி. எம். நாராயணசாமி பிள்ளை, டி. வி சோமசுந்தரம் முதலி வர்கள் பேட்டி கண்டு, ரயில்வே வேலை நிறுத்த வழக்கினால் ஜெயிலுக்குள் இருக்கும் தொழிலாளர்கள் 7-பேருக்கும் அரிசிச்சாதம் கொடுக்க ஏற்பாடுசெய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். கனம் சட்டமெம்பரும் கூடியவிரைவில் வேண்டுகோளைப் பூர்த்திசெய்வதாகக் கூறினார்.

லால்குடி தாலூகா சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு.

இம்மகாநாடு 22.11-31ந் தேதி ஞாயிற்றுக்கிழமை லால்குடி போர்ட் ஹைஸ்கூலில் நடைபெறும்.

மகாநாட்டுத் தலைவர்—பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள்.

மகாநாட்டைத் திறந்துவைப்பவர் திருச்சி தோழர் டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்., அவர்கள்,

மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித்தலைவர் பெருவளநல்லூர் தோழர் பி. கே. பிரசன்னவெங்கடாஜலம் அவர்கள்.

மகாநாட்டிற்கு வெளியூர்களிலிருந்தும் மற்றும் பல தோழர்கள் வந்து சொற்பொழிவாற்றுவார்களெனகாரியதரிசி அறிவிக்கிறார்.

இராசீபுரம் ஆகமவெள்ளாஞ் செட்டிமார்கள்.

சமூக சீர்திருத்த விஷயமாய் 11—8—31 செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஷெயார்களுடைய பொது மடத்தில் ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்தில் திரு. சி. நாராயணசாமி செட்டியார் தலைமை வகித்தார். 110 கனவான்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அக்கூட்டத்தில் திரு. சி. நாராயணசாமி செட்டியார் அவர்களைத் தலைவராகவும், திரு. கா. கந்தப்ப செட்டியார் அவர்களை உதவித்தலைவராகவும் பொக்கிஷதாராகவும், திரு. செ. அப்பாதுரை அவர்களைக் காரியதரிசியாகவும், மற்றும் 8 கனவான்களை நிர்வாக சபை அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பிறகு சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் முடிந்தது.

மறுபடியும் 17—10—31 சனிக்கிழமை திரு. செ. அப்பாதுரை அவர்கள் மண்டியில் கூடிய மகா சபைக்கூட்டத்தில் சமூக முன்னேற்றத்திற்காக வேண்டிய 31 தீர்மானங்களை நிறைவேற்றியபின் கூட்டம் முடிந்தது.

சேலத்தில் ஆஸ்பத்திரி திறப்புவிழா.

சேலம் அசோகவிலாச கட்டிடத்தில் அசோகா ஆஸ்பத்திரி 14 தேதி சனிக்கிழமை காலையில் மந்திரி கனம் திரு முனிசாமி நாயுடு அவர்களால் துவக்கப்படும்.

திரு. வெங்கட்ட நாராயண நாயுடு அவர்கள் அவ்விழாவிற்குத் தலைமை வகிப்பார். திருவாளர்கள் விஜயராகவாச்சாரியார், கேசவப் பிள்ளை, ஆகியவர்களின் படங்களை டாக்டர் சுப்பராயன் அவர்கள் அலங்கரிப்பார். 15ந் தேதி ராசிபுரம் யூனியன் ஆபீசில் திருவாளர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் படத்தை திரு. முனுசாமி நாயுடு அவர்கள் அலங்கரிப்பார்.

சூலூர் திராவிட வாலிப சங்கத்தார் தீர்மானம்.

1. இச்சங்கம் சுயமரியாதை இயக்கத் தலைவர் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களின் உடல் நலம் குன்றினமை கேட்டு வருந்துவதுடன் சீக்கிரம் குணமாகுமாறு ஆசைப்படுகிறது.

2. இப்பக்கங்களில் 4, 5 சுயமரியாதைச் சங்கங்களிருப்பதால் சீக்கிரம் ஜில்லாப் பிரசாரர்களை அனுப்பிப் பிரசாரம் செய்விக்க வேணுமாய் இச்சங்கத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். கூடிணதிசையான சங்கங்களைப் பலப்படச் செய்யவும்மகாணச்சங்கத்தாரால் பொருளுதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறார்களென தீர்மானிக்கிறதெனஒரு நிருபர்எழுதுகிறார்.

கல்லிடைக்குறிச்சியில் விதவா விவாகம்.

கடந்த 30-10-31உ வெள்ளிக்கிழமை யன்று கல்லிடைக்குறிச்சி சுயமரியாதைச் சங்கம் காரியதரிசி திரு. கே. என். தங்கவேலு அவர்களுக்கும், பேட்டை திரு. நயினார் ஆச்சாரியவர்கள் புதல்வி திருமதி உலகம்மாள் அவர்களுக்கும் கல்லிடைக்குறிச்சி மணமகன் இல்லத்தில் வைத்து சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பின்னர் திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை இளைஞர் சங்கக் காரியதரிசி திரு. எஸ். குற்றால லிங்கம் அவர்கள் சீர்திருத்தத் திருமணத்தைப் பற்றியும், விதவா விவாகம் நமது நாட்டிற்கு வேண்டிய அவசியத்தைப் பற்றியும் இனிய பிரசங்கமொன்று செய்தார்கள். இத்திருமணத்தால் மணமகள் திருமண நாள்வரை பெற்றிருந்த "விதவை" யென்னும் அவப்பெயர் நீங்கியது பெரிதும் குறிப்பிடத்தக்கது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சந்தாதாரர்களுக்கு

இனாம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு 0—8—0 அணாவிலை, குடி அரசு வெளியீட்டுப் புத்தகங்கள் இனாமாகக்கொடுக்கப்படும்.

மனைவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55 ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாத்திரம் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும்உடையவர். நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன வயது 30 முதல் 40 க்குட்பட்டதாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, செட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல்வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா.

C/o "குடி அரசு" ஈரோடு.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லே பேன்கள் பற்றுவதும் பின் சீலி ஒருதடவைக்கு நூற்றுக்கணக்கான உயிர்களைக்கொல்வதும், பேன் அதிகமாய்ப்பெருகி மண்டையில் பொடிப்பு, சிரங்குகள் உண்டாவதுடன் ஒருவிதக்காய்ச்சலை உண்டாக்கி அவதிப்படச்செய்வதும்தான் சைவர்கள் கண்ட சிவகாருண்ய உண்மைபோலும், சில பெண்களுக்கு 4, 5 அடி நீளம் தலைமயிரிருக்கிறது. அவர்கள் எப்படித்தான் ஜீவிக்கிறார்களென்பது எனக்குத்தெரியவில்லை. இவ்வாறு நீளமான கூந்தலினால் பெண்களுக்கு என்ன நலம். மனுஷத்தன்மையை யறியாத புருடர்கள் வாய்த்தால் இந்நீண்ட கூந்தலை நன்றாய்ப் பிடித்துக்கொண்டு முதுகில் படீர் படீர் என அடிக்கத்தான் வசதியேயொழிய வேறு நலம் பெண்களுக்கிருப்பதாகத் தெரியவில்லை. நம் நாட்டிலுள்ள ஆடவர்கள் பலர். தமது பெண்கள் ஐரோப்பிய பெண்களைப் போன்று முடியை வெட்டிக்கொண்டால் அவர்களின் அழகே போய்விடுமென்று வாதிக்கின்றார்கள். என்னே இவர்களின் மனப்பான்மை! பெண்கள் ஆண்களால் அழகு பார்க்கவும், தங்களின் காம இச்சையை பூர்த்தி செய்விக்கவும், தோன்றிய அசேதனப் பொருள்களா? பெண் மக்களெல்லாம் ஆண்மக்கள் தலையை கிராப் செய்துகொள்வது அழகாகவில்லை தலைமுடியைநீளமாய்வளர்த்து பின்னிஜடைபோட்டுக்கொள்ளவேண்டும் என்று எழுதினால், கூறினால் எத்தனை ஆண்கள் அதை ஒப்புக்கொண்டு நடப்பர். பெண்மக்கள் அவ்வாறு கேட்க உரிமையில்லையா? இந்திய நாட்டிலுள்ள சில தமிழ்ப் பண்டிதர்கள் இச்சமயம் இயற்கையைக் கொண்டுவந்து புகுத்தி மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். இவ்வியற்கைச் சட்டம் பெண்மக்களுக்கு மட்டுமா? ஆண்மக்களுக்கில்லையா வென அப்புலவர்களைப் பன்முறையும் வினவுகின்றேன். ஐரோப்பிய பெண்கள் தலைமுடியைத் தங்கள் வசதிக்கேற்ப வெட்டியிருக்கின்றார்கள். அவர்களுக்கென்ன அழகில்லையா? அழகில்லையென்று அவர்கள் கணவர்கள் அவர்களை விரும்புவதில்லையா? அவர்கள் பிள்ளைகள் பெறுவதில்லையா? அதினால் அவர்களுக்கு நேர்ந்துள்ள கெடுதல்கள் இன்னதென்று நம் தமிழ் நாட்டுப் பழமை விரும்பிகள் விளக்குவார்களா வென்று கேட்கின்றேன். இப்பழமைவிரும்பிகளால் பெண் உலகு பாழ்பட்டுவருகின்றது. நமது நாட்டில் ஆண்களின் ஜனத்தொகையை பெண்களின் ஜனத்தொகையை விட நசித்து வருகிறதென்பதை எந்த இந்திய தேசாபிமானியாவது அல்லது எந்த சிவகாருண்ய மதஸ்தனாவது உணர்ந்து அதற்கானவை புரிய முன் வந்தானா? இல்லை! இல்லை!! எல்லாம் சுயநலம்! சுயநலம்!! இக்கிளர்ச்சியிலும் ஏதாவது தன்னலமிருக்கக் கண்டால் எத்தனையோ தேசிய வீரர்கள் வெகு கம்பீரமாய் வீர கர்ஜனையுடன் பிரசாரமும், பத்திரிகைகிளர்ச்சியும் செய்துவிடுவர். பாவம்! பெண்களுக்குப் பரிந்து பேசுவதனால் யாதொரு பிரயோஜனமுமில்லையென்று திட்டமாயறிந்தே தேசாபிமானிகள் பெண் நலன் பேணல் என்றும் நல்லறத்தைப் புறக்கணித்து விட்டு பெண் நலத்திற்கு இடையூறியற்றும் பேயர்களையெல்லாம் தேசாபிமானிப் பட்டமீந்து அவர்களுக்கு மேதை மரியாதையும், பத்திரிகையில் அவர்களைப் பற்றி பெரிய விளம்பரங்களும் மிகத்தடபுடலாய் செய்யப்படுகிறது. பெண் நலம் பேண முன் வருபவர்கள் நிந்திக்கப்படுகிறார்கள். பத்திரிகைகள் அவர்களின் செல்வாக்கைக் குறைக்க வழி தேடுகின்றன. இவைகளெல்லாம் ஜீவகாருண்யமென எவரே வாதிக்க வல்லார் என அறிவுடைய மக்களை வினவுகின்றேன்.

நகைகள்:—தமிழ் நாட்டிலே இது காலையாண்டும் நகையைப்பற்றிய பேச்சாகவே இருக்கிறது. எத்தகைய திருமணப்பேச்சிலும் முதலாவதாகக் கேட்கப்படுகிறது நகை எவ்வளவு என்பதே. பெண் நகைக்காக விரும்பப்படுகின்றாளே யொழிய அவள் குணம், நடை, அறிவு, அழகு முதலியவற்றிற்கு மணம் நடைபெறுவது தமிழ்நாட்டிலில்லை. ஒவ்வொரு ஆண் மகனும் தன் மனைவியுடைய நகையின் பெறுமானம் இவ்வளவென்றும், அதன் வேலைப்பாட்டின் தன்மையையும் சொல்லப் பெருமைப்படுகின்றான். எவ்வளவு எளியவனாயினும் கடன் கொண்டாவது தன் மனைவிக்கு கொஞ்சம் நகைபோட்டுப் பார்க்க ஆசைப்படுகிறான். ஆண் மகனே காலத்தை அனுசரித்து காதில் போடும் கடுக்கன், முருகு, பச்சைக் கல் முதலியவைகளை அநாகரீகச்செயலென்று நிறுத்திக்கொண்டான். பெண் மக்களையோ அலங்கரித்துப் பார்த்து மகிழத்தக்க பொம்மையாய் பாவித்து உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை நகைகளைப் பூட்டிவிடுகிறான். பணக்காரன் வீடுகளிலோ ஒரு ஆள் சுமக்கும் கூடுதலான பாரமுள்ள நகைகளால் பெண்கள் சுமக்க முடியாது கஷ்டப்படுத்தப்படுகிறார்கள். இச்செயல்கள் பட்டணங்களில் கொஞ்சம் குறைவுற்றிருப்பினும் கிராமங்களில் லேசாய் ஒழிவதாய்க்காணோம். சிலவிடங்களில் பெண்கள் இந்த நகைகளால் தினந்தோறும் செத்து செத்துப் பிழைக்கின்றார்களென்று தான் கூற வேண்டியதிருக்கிறது. ஊரில் கள்ளர்கள் என்றால் வீட்டில் பெண்களுக்குத் தூக்கம் கிடையாது. காட்டுவழி போனால் பெண்களுக்கு கள்ளன் கள்ளன் என்றே நெஞ்சு துடிக்கிறது. தென்னிந்தியப்பெண்களுக்குப் பிடித்த இந்த நகைப்பேயால் தான் நாட்டுப் புறங்களில் சுகாதாரத்திற்கேற்ற விதமாய் வீடுகட்டி வாழக்கூட வசதியில்லாதிருக்கிறது. நகையணிவது மட்டுமல்ல தங்கத்தினால் தாலி கட்டுவதுங்கூட தமிழர்களின் நாகரீகமன்று என அறிஞர்கள் செப்புகின்றார்கள். மாலையிடல் தான் பண்டைகாலத்தின் மணவினைக்குறியாய் விளங்கினது. அவ்வாறிருக்க தமிழர்களை இந்த நாகரீகப்பேய் விட்டபாட்டைக்காணோம். இந்த நகையினால் தான் பெண்கள் கள்ளர்களால் பல விடங்களில் துன்பத்திற்காளாவதும் தவிர கோழைத்தனமும், பயமும் குடி கொண்ட உள்ளமுடையோராய் ஆகிவிடுகின்றனர். இதைப்பற்றிக் கூட யான் அதிகமாய்க் கவலைப்படவில்லை. வேண்டுமானால் பெண்களுக்கு ஆபத்துக்காலத்தில் இந்நகைகளை விற்றுப் பிழைத்துக்கொள்ளக்கூட வழியிருக்கிறது என்று மனதை சமாதானம் செய்து கொள்வேன். ஒரு சிறிய முள் தங்கள் மக்கள் காலிற் தைப்பினும் பொறுக்க முடியா மனதையுடைய மாதாபிதாக்களும், இயற்கையில் மக்களுக்கு ஏற்பட்ட நவத்துவாரங்களோடு கூரிய ஊசியால் இரத்தம் சிந்த உடலில் பல துவாரங்கள் போடும்படி சொல்வதும் அதைப்பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பதும் நீதியா? காருண்யச் செயலா? என்பது தான் என் மனத்தில் உள்ள ஒரு பெரும் பிரச்சினை. இதற்கும் சைவர்களின் சிவகாருண்ய மதம் இடங்கொடுக்கிறதா? ஆடுமாடுகளை அடிக்கவும், பறவைகளை தலை கீழாய்த் தூக்கவும் பொறாத ஜீவகாருண்ய சங்கம் இதைப்பற்றி ஆராயாதது வியப்பாக இருக்கிறது. பெண்கள் நிலை இந்த பறவைகளைவிட கேவலமாய் இவர்களுக்குத்தோன்றிற்று போலும். (தொடரும்)

[7ம் பக்கத் தொடர்ச்சி.]

நடந்தால் கற்பு என்னும் தெய்வத்தன்மை போய்விடும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண் தன்மை போய்விடும், இவைபோனால் அவர்கள் உத்தமப்பெண்கள் ஆகமாட்டார்கள்" என்று கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர். இவை ஆண்களின் சுயநன்மைக்காக உண்டாக்கிய கட்டுப்பாட்டைத்தவிர வேறு என்ன?

மோக்ஷம், நரகம் என்னும் கட்டுப்பாடுகளை எடுத்துக்கொள்ளுங்கள். இவையும், மக்களை ஏமாற்றி அடிமைப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. "பெரியோர் சொற்களுக்குக்கீழ்ப்படிதல், வேதம், புராணம், மதம், வருணாச்சிரமதருமம், கடவுள் முதலியவைகளை நம்பி அவைகளுக்கு ஏற்ப ஒழுகினால்மோட்சம்பெறலாம்" என்பது வைதீகர்களின் உபதேசம். மேற்கூறியவைகளை நம்புகின்றவன் சமதர்மவாழ்க்கையில் வாழமுடியாதல்லவா? கஷ்டமோ, சுகமோ முன்னோர்வாழ்க்கையைப்பின்பற்றி வாழ்ந்தால்தானே மோட்சம்பெறமுடியும்? ஆகவே மோட்சத்தை நம்புகின்றவன் உலகவாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதும்; இன்பம் அடைவதும் ஒருபோதும் இல்லை.

நரகத்தின் சூழ்ச்சியைப்பாருங்கள். திருடினால் நரகத்தை அடைவான். பொய் சொன்னால் நரகத்தை அடைவான், கொலை செய்தால் நரகத்தை அடைவான், பொறாமைப்பட்டான் நரகத்தை அடைவான், என்ற நீதிகளைக்காட்டி மக்களைப்பயமடையச் செய்வதே நரகம் என்பது. இந்த நரகம் என்னும் கட்டுப்பாடு ஒழிந்தால் உலகில் ஏழை பணக்காரர்கள் இருக்கமுடியாது. உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் இருக்கமுடியாது. கஷ்டப்பட்டு வேலை செய்கின்றவர்கள் துன்பவாழ்க்கையிலும், சோம்பேரிகள் இன்பவாழ்க்கையிலும் இருக்க முடியாது. ஒரு நிமிஷத்தில் பணக்காரர்களின் செல்வங்கள் ஏழைகளால் கொள்ளையடிக்கப்பட்டுவிடும். ஏமாற்றும் சோம்பேரிகள் ஜனசமூகத்திலிருந்து ஒழிக்கப்படுவார்கள். வஞ்சகம் சூழ்ச்சி முதலியவைகள் அடியோடு ஒழியும்.

பாவம், புண்ணியம் என்பவைகளும், மோட்சம், நரகம் என்பவைகளைப்போலவே அறிவுடையவர்களுக்கும், பணக்காரர்களுக்கும், ஏமாற்றுக்காரர்களுக்கும், பாதுகாப்புக்காக ஏற்பட்டவைகளேயாகும்.

ஆகவே மோட்சம், நரகம், பாவம், புண்ணியம் ஆகியவைகள் ஏமாற்றுகின்றவர்களின் சுயநலத்திற்காக ஏற்பட்ட கட்டுப்பாடுகளைத்தவிரவேறல்ல. ஆகையால் தற்காலத்தில் இருக்கும் கட்டுப்பாடுகள் அடியோடு ஒழியவேண்டும். சமதர்மத்தை நிலைக்கச்செய்யும் புதிய கட்டுப்பாடுகள் உண்டாக வேண்டும் என்று கூறுகின்றோம். இப்பொழுதுள்ள சுயநலத்திற்கான கட்டுப்பாடுகள் ஒழியவேண்டுமானால் மதம், வேதம், புராணம், ஒழுக்கம், நீதி ஆகியவைகள் அடியோடு மாறுதலடையவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் எல்லோரும் சம இன்பம் அடையத்தகுந்த நிலைமையும், வழியும் உண்டாகும். இன்றேல் இப்பொழுது இருப்பதுபோல் கஷ்டப்படுவோர் துன்பத்தோடும், சோம்பேரிகள் சுகத்தோடும் வாழவேண்டியதுதான்.

மணமகள் தேவை.

எந்தச் சாதியானாலும் சரி. 5வது வகுப்பு வரையிலுமாவது வாசித்திருக்கவேண்டும். நான் ஈரோடு முனிசிபல் எலிமெண்டரி பாடசாலையில் உபாத்தியாயர். மாதம் 30 ரூ. சம்பளம். நான் புரோட்டெஸ்டண்ட் கிறிஸ்துவன். விவாகம் கிறிஸ்து ஆலயத்திலாவது அல்லது சுயமரியாதை முறையிலாவது செய்யப்படும். விதவையானாலும் சரி. கீழ்கண்ட விலாசத்திற்கு தெரியப்படுத்தவும்.

John Krishnasamy,
டீச்சர், முனிசிபல் ஸ்கூல்,
தெற்கு ஓக்கிலியர் வீதி,
ஈரோடு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஜஸ்டிஸ் கக்ஷி இயக்கம்.

லார்டு கோஷனின் அபிப்பிராயம்.

சென்னையைப் பற்றி பாராட்டுதல்.

லண்டன் நவம்பர் 10— கிழக்கிந்தியச் சங்கக் கூட்டத்தில் ஸர். எ. பி. பாத்ரோ ஜஸ்டிஸ் கட்சி இயக்கத்தைப் பற்றிப் பிரசங்கஞ் செய்த பொழுது லார்டு கோஷன் தலைமை வகித்துப் பேசுகையில் ஜாதி வித்தியாசமின்றித் தேசீய அபிவிருத்தியடையப் போராடுவதே பிராமணரல்லாதார் இயக்கமென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் உருவான வேலையைத் தாம் மிகப் பாராட்டுவதாகவும், ஜாதிக் கட்டுப்பாட்டைப் போக்கக் கல்வி தான் சிறந்த வழியென்பதை இவ்வியக்கம் நன்குணர்ந்திருக்கிறதென்றும், லார்டு வில்லிங்டன் மந்திரிகளிடையே கூட்டுப் பொறுப்பேற்படுத்தியது சீர்திருத்தச் சட்ட அமுலாம்பத்தில், சட்டசபையின் வேலையை நிதானப்படுத்திக் கொண்டு போக மிகவும் உபயோகமாக விருந்ததென்றும் பார்லிமெண்டு முறையில் அறிவும் அனுபவமும் மேற்பட்டு வந்த சமயத்தில் பிளவேற்பட்டுக் கொண்டே போகாமல் இது தடுத்து வந்ததென்றும் கூறினார்.

திரு. எ. டி. பன்னீர் செல்வம் பேசுகையில் சென்னையில் வகுப்புப் பிரச்னை மிகக் குறைவாக விருப்பது ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு பெருமையை யளிக்கக் கூடியதென்றும், தாழ்ந்த வகுப்பினருக்கு அதிக பாதுகாப்பேற்பட்டிருக்கிறதென்றும், உள்ள சந்தர்ப்பத்தில் சாத்தியமானவரையில் இரட்டையாட்சி முறையை இக்கட்சி வெற்றிகரமாகச் செய்திருக்கிறதென்றும், அதன் மூலம் சென்னை சுய ஆட்சிக்குத் தகுதியுடையதென்பது நிரூபிக்கப் பட்டிருக்கிறதென்றும், ஆகவே கூடிய சீக்கிரத்தில் மாகாணங்களில் மாத்திர மல்லாமல் மத்திய கவர்ன்மெண்டிலும் பூரண பொறுப்பாட்சியை யுண்டு பண்ண வேண்டு மெனத் தாங்கள் சர்வகட்சி மகாநாட்டைக் கேட்டுக் கொள்ளுவதாகவும் பேசினார்.

ஸர். ஜேம்ஸ் ஸிம்சன் பேசுகையில், சரியான பார்லிமெண்டு தோரணையில் மந்திரி சபையை முதன் முதல் அமைத்தவர்கள் ஜஸ்டிஸ் கட்சியினர்கானென்றும், ஒன்றுபட்ட மந்திரி சபையாக விருந்து இவர்கள் சென்னையில் பல காரியங்களைச் செய்தனரென்றும், அக்காலத்தில் மற்ற மாகாணங்கள் ஒத்துழையாமை தான் செய்துவந்தனவென்றும் கூறினார்.

லார்டு விண்டர்டன் பேசுகையில் மாண் போர்டு சீர்திருத்தம் ஏற்பட்டது முதல் சென்னை இந்தியாவின் மற்ற பாகங்களுக்குப் பல விஷயங்களைப் போதித்திருக்கிறதென்றும், இதில் கஷ்டங்கள் பல ஏற்பட்டனவென்றும் அதற்கு ஒத்துழையாமை கூட அவ்வளவாகக் காரணமில்லையென்றும், புதிய அரசியலைச் சரிவ நடத்தக் கூடிய தகுந்த தலைவர்கள் முன் வராததே இக்கஷ்டங்களுக்குக் காரணமென்றும், இந்தியாவில் சுய ஆட்சி வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால் சென்னையில் காட்டப்பட்டு வந்துள்ள உணர்ச்சியே பொதுவாகக் காட்டப் பட வேண்டுமென்றும் சொன்னார்.

ஸர். பாத்ரோவின் பிரசங்கம்.

ஸர். பாத்ரோ பேசுகையில் தேசீய முன்னேற்றத்தை உத்தேசித்து ஜாதித்துவேஷமும் படித்த இறுமாப்பும் போக வேண்டுமென்பது ஜஸ்டிஸ்இயக்கத்தின் கோரிக்கையென்றும், இந்திய ஜனங்களின் சம்மதியையும் ஒத்துழைப்பையும் பெற்றால் தான் இந்தியாவை ஆளுவது சாத்தியமாகுமென்றும், எந்தச் சீர்திருத்தத் திட்டம் தயாரித்தாலும் அதில் எல்லாப் பிரிவினருக்கும் வகுப்பினருக்கும் தகுந்த பிரதிநிதித்துவமேற்படுத்தவேண்டுமென்றும், வகுப்புப் பிரச்னையைத் தீர்ப்பதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் உதவ வேண்டுவது அவர்களுடைய கடமையாகுமென்றும், கவர்ன் மெண்டார் தங்கள் கொள்கையை வெளியிடும் காலம் வந்து விட்டதென்றும் பேசினார்.

ஸ்ரீமான் யாதவ் இக்கூட்டத்தில் பேசுகையில் ஜஸ்டிஸ் இயக்கம் சீக்கிரத்தில் இந்தியா வெங்கும் பரவு மென்பதாகக் கூறினார். (சு—மி)

திண்டுக்கல் சுயமரியாதைச் சங்கத்தின் திறப்புவிழா.

5-11-31ல், இவ்வூரில் சுயமரியாதைச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தபடி, 5-11-31உ காலை 12-மணி சமாருக்கு திருச்சி "சண்டமாருதம்" பத்திராதிபர் தோழர் சொ. முருகப்பா அவர்களையும், திருமதி மரகதவல்லியம்மையார் அவர்களையும், 'சன்மார்க்கன்' ஆசிரியர் சுவாமி சிவநேசம் அவர்களையும் மோட்டாரில் வைத்து, ஜாகையிலிருந்து வாத்தியத்துடன் முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலமாக அழைக்கப்பட்டு வந்து சங்கக் கட்டிடத்தில் நமது இயக்கத்தில் பேரன்புடையவரும் பிரசாரகருமான சித்தையங்கோட்டை, திரு வி எஸ். எம். மணி அவர்களின் தலைமையின் கீழ், திரு முருகப்பா அவர்களால் சங்கம் திறந்து வைக்கப்பட்டது. திருமதி மரகதவல்லியம்மையார் அவர்களால், சங்கத்தின் போர்டை சுவரின் மேல் உயர்த்தப்பட்டது.

அவ்வமயம், திருவாளர்கள். முருகேசம் குடிஅரசு ஏஜண்டு, நாகலிங்கம், சித்தயங்கோட்டையிலிருந்து, பிரபலபிரசாரகரும், டிஸ்டிரிக்ட் எடுகேசன் கவுன்சில் மெம்பருமான, கே. எஸ். உசன் முகமது ரூவுத்தர், M. R. A. S. அவர்களும், சித்தயங்கோட்டை "மக்கள் விடுதலை" சங்கம் பிரசிடெண்டு, ஈா. ச. பரமசிவம் அவர்களும், இன்னும் பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

அன்று மாலை 6-30 மணிக்கு இவ்வூர் பந்தடி மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. சுமார் 3000 பேர் கூடியிருந்தனர். பழனி "சன்மார்க்கன்" ஆசிரியர் தோழர் சுவாமி சிவநேசம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி சுயமரியாதைச் சங்க பிரசிடெண்ட் ஏ. எஸ். முருகேசம் அவர்கள் பிரரேபிக்க D. M. நாகலிங்கம் அவர்கள் ஆமோதித்தார். சுவாமிகள் தலைமை வகித்து சுமார் 20 நிமிஷம் முகவுரையாக சுயமரியாதைக் கொள்கைகளைப் பற்றியும், காங்கிரஸ் தொண்டினைப்பற்றியும் பேசிவிட்டு உபந்யாசகர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார். 'மக்கள் விடுதலை' என்ற பொருள் பற்றி தோழர் மாகதவல்லியம்மையாவர்கள் பார்ப்பனர்களின் கொள்கைகளைப் பற்றியும், ஜாதி, சமயம், சடங்கு, முதலியவற்றால் பெண், ஆணுக்கு அடிமையாகவும், ஐதீகம் ஜாதி முதலியவைகள் சமயத்திற் குக்கட்டுப் பட்டிருப்பதாகவும் இவைகள் தகர்த்தெரியப்படல் வேண்டுமென்றும், காந்தியடிகள் இரவு பகலாய் சுவாமி கும்பிட்டும் அந்த சுவாமி இன்னும் சுயராஜ்யத்தைக் கொடுக்கவில்லையென்றும், கடவுள் பெயரால் நடைபெறும் பித்தலாட்டங்களைப் பற்றியும், சுமார் முக்கால் மணிநேரம் பேசினார்கள். பின்னர் தோழர் முருகப்பா அவர்கள் வட்டமேஜை மகாநாடும் நமது நாடும் என்பது பற்றி சுமார் 1½ மணி நேரம் பேசினார். லண்டனில் திரு. காந்தி நடந்துகொண்ட விஷயங்களைப்பற்றியும், வருணாச்சிரமம், தொழில் பாகுபாடு, பொதுத்தொகுதி முதலிய விஷயங்களில் திரு. காந்தியிடம் அபிப்பிராய பேதமேற்படுவதில் அதிசயமில்லை என்றும், திரு காந்தியின் செய்கை ஆதிதிராவிடர்கள் போன்றவர்களுக்கு மீளாத அடிமைத்தனத்தைத் தரக்கூடியதாயிருக்கிறதென்றும், சமூக வாழ்விலிருக்கும் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதென்றும், இன்னும் பல விஷயங்களைப்பற்றி பேசிவிட்டு சமூக சீர்திருத்தத்திற்கு எதிர் முட்டுக்கட்டையாக சில சந்தர்ப்பத்தில், காங்கிரஸோ, காந்தியோ மதமோ, கடவுளோ யார்வந்தாலும் சுயமரியாதைக்காரர் விட்டுக்கொடுக்க முடியாதென்றும், நம் இந்தியாவில் பிறந்த அத்தனை பேரும் ஒரே தாய் வயிற்று மக்களென்ற உணர்ச்சி வரும் வரை சுயராஜ்யம் அனுபவத்தில் வர முடியாதென்றும், ஜாதிபேதமும், சமயபேதமும் வீண்செலவும், அறியாமையும் ஒருவரையொருவர் நசுக்க சாஸ்திரமும், சமயமும், ஏடும்பிரிவும் இருக்கும் வரை சமத்துவமான சுயராஜ்யம் வரமுடியாதென்றும், மேலேயிருக்கிற வெள்ளைக்காரனைப் போகச்சொல்லுவது மட்டும் போதாதென்றும் கூறினார். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதிப்புரை.

—:0:—

பாகீரதி அல்லது ஓர் பால்யவிதவையின் பரிதாப நிலை.

திருநெல்லை திரு. அ. இரத்தினசபாபதியால் இயற்றப்பட்டு ஸ்ரீமதி நீலாவதி அம்மையாரால் எழுதப்பட்ட முகவுரையுடன் கூடிய "பாகீரதி" என்னும் புஸ்தகமொன்று வரப்பெற்று மகிழ்ந்தோம். பால்ய பெண்கள் பெண்ணாசை வெறிகொண்ட வயோதிக வைதீகர்களை கணவன்களாகக்கொண்டு எவ்வாறு துன்புறு

றார்களென்பதையும், மறுமணம் தடைசெய்யப்பட்டு பால்ய விதவைகளாக வீற்றிருக்கும் விதவைப் பெண்களது வாழ்க்கை இறுதிவரை அடியோடு சீர்குலைந்து, பயனற்று நாசமாகி பரிதாபகரமான மரணத்தை யடைகிறார்கள் என்பதற்கு "பாகீரதி" என்னும் பெண்ணே போதிய சான்றாகும் என்பது தோன்றவும் இந்நூலாசிரியர் தெளிவாகக் காட்டியுள்ளார். பருவ கால இன்ப வேட்கை உதயமாகும் காலமான, தக்க வயதுடைய பெண்கள், அவ்வாசை யடியோடு அஸ்தமிக்கும் காலமான வயோதிக திசை நடக்கும் புருடர்களை மணஞ்செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்தத் துவக்குவது, "நபுஞ்சகன் கையில் அகப்பட்ட ரம்பையின் கதைபோலவே முடியும் என்பதை இக்கதையில் ஹாஸ்யரூபமாகவும், உட்கருத்தோடும் எழுதப்பட்டிருக்கிறது.

இறுதியில் கதை பரிதாபகரமான முடிவை எய்தினாலும், பால்ய விதவைகளது தீராத்துன்பம் ஓயாக்கவலை, அரசாங்க தண்டனை, தற்கொலைக்குத் துணிவு முதலிய சகல அட்டூழியங்களுக்கும் மூலகாரணமாயிருப்பவை நமது சாஸ்திரம், ஸ்மிருதி, வைதீகவெறி, பணத்தாசை, முதலியவைகளே யாகும் என்பதை இந்நூல் செவ்வனே எடுத்துக் காட்டுகிறது. மேற்படி புஸ்தகம் வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்புகளை போஸ்டில் அனுப்பிக் கீழ்க்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

ஸ்ரீ சித்தார்த்தா புத்தகசாலை,
ஆண்டர்சன் பேட்டை, P.O.
கோலார் தங்கவயல். [S. I.]

(5ம் பக்கத் தொடர்ச்சி)

னுஞ் சில நூற்றாண்டுகளாக நாம் பெண்களைத் தாழ்த்தி வருவோமாகில், நமதுமனித குலம்,பூலோகத்தை விட்டு, நீங்கி விடும் போலும். இந்தியர்கள் பலநூற்றாண்டுகளாக பிறதேசங்களுக்கு உட்பட்டு வாழ்ந்து வந்ததும, நமது பெண்களை நடத்தும் வித்தியாசத்தாலென்ன சில அறிஞர் கூறுகின்றார்கள். இந்தியாவில் தொழிலாளர் 'இட்டதுபிச்சை' என கொடுத்ததை வாங்கிக் கொண்டு, தங்கள் முதலாளிகள் வயம் அகப்பட்டுழல்வதும் இதே காரணத்தாலென அறிக. தங்கள் ஸ்திரீகளின் பலவீனத்தால்,தாங்களும் பலவீனமடைந்து முதலாளிகள் முன்னே தங்கள் சுயமரியாதையை இழந்து, தாழ்ந்து பணிந்து நடப்பதும் இதே காரணத்தாலென அறிக. ஐரோப்பியர், அமெரிக்கர் முதலிய மேல்நாட்டுத் தொழிலாளிகள், இந்தியத் தொழிலாளிகளை விட பல துறைகளில் மேம்பட்டு வாழ்வது மேல் நாட்டு ஸ்திரீகளின் செல்வாக்கு. நமது நாட்டு ஸ்திரீகளின் செல்வாக்கை விட உயர்ந்திருப்பதாலென அறிக. ஆதலின் இதனைத் தொழிலாளர் கவனித்து, நமது நாட்டு ஸ்திரீகளின் சமத்துவத்தை அதிகப் படுத்தவேண்டும்.

கல்வியிலும், நமது நாட்டுஸ்திரீகள், மேல்நாட்டாரை விட கேவலமாகவே இருந்து வருகின்றார்கள். நமது நாட்டில் 100 க்கு இருவர்க்குகூட எழுதப் படிக்கத் தெரியாதென்றால், என்ன நமது நாகரீகம்! என்ன நமது வேத வேதாந்தம்!! என்ன நமது சாத்மீகம்!!! எல்லாம் வெறும் பேச்சே!!!! "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" ஆக முடிகிறது.

முதலாளி தத்துவத்திற்குட்பட்ட இவ்வுலகில், ஒரு கொடூர பழக்கம்வழங்கி வருகின்றது இந்தப்பழக்கத்தை, நமது ஜாதிகளும்,நமது மதங்களும் ஆதரித்தும் கண்டுங் காணாமலும் பாராமுகமாயிருந்தும் வருகின்றன. நமது இந்திய நாட்டில் இந்தப் பாழும் பழக்கத்தை மதஸ்தாபனமாகவே கருதப்பட்டு வருகின்றது. இந்த ஸ்தாபனத்தில் இந்தப் பழக்கத்துக்குட் பட்டவர்கள் பிரத்தியேக ஜாதியாராகவே மதிக்கப் பட்டுள்ளார். இது தான் தாசி வேசித்தனம். நமது நாட்டில், இப்பழக்கத்திற் குட்பட்டவர்களை தாசி என்றும், மேல் நாடுகளில் வேசி (Prostitutes) என்றும், சொல்லுவார்கள். இது தனியுடைமையின் சித்தாந்தப்படி ஏற்பட்ட சமூக ஊழலேயாகும். சகலமும் தனிப் பொருளாக மதிக்கப் படுகின்றபடியால் பெண்களும் இந்த சித்தாந்தப்படி தனியுடைமையாகின்றார்கள் காசு கொடுத்தவனுக் கெல்லாம் சொந்தமாகக் கருதப்படுகின்றார்கள். இந்த சித்தாந்தத்தால் தான், இந்த பண்டைக்காலக் கொடுமை நிலைத்து வருகின்றது. ஆனால், பொதுவுடைமையின் சித்தாந்தப்படி, தாசி வேசித்தனத்தை மனுஷ குலத்தையே வேரறுக்கும் கோடாலிக் காம்பாகக் கருதப்படும். பொதுவுடைமையில் ஆணும் பெண்ணும் சரி சமத்துவமுள்ளவர்களாதலால் ஒருவரை ஒருவர் காசு கொடுத்து வாங்க முடியாது. நாகரீகமுள்ள சில நாடுகளில், தாசி வேசித்தனத்தைக் கண்டும் காணாமலும் நடந்தேறி வர விடுகின்றார்கள். இதனை ஒழிக்க பல பல விதி விலக்குகளைச் சொல்லி வந்த போதிலும், இந்தக் கொடும்பழக்கங்கள் குறைந்ததாகக் காணவில்லை. இந்தத் தொழிலுக்கு இடம் கொடுத்து வரும் அரசாங்கங்கள், எதுவானாலும், நாகரீகத்திற்குப் பாத்திரமில்லை யெனவே கூறல்வேண்டும். இந்தக் கேவலத் தொழிலை ஆலய ஸ்தாபனமாக ஆதரிக்கும் மதங்களை என்னவென்று மதிப்பது? நமதுஇந்து மதம் அறிஞர்களிடம் மதிப்பற்றுப் போனதற்கு இதுவே காரணமென எண்ண வேண்டும். இந்தப் பூர்வீக பாதகத் தொழிலைப் புரிய இடங் கொடுக்கும் மதங்கள், உலகை விட்டு அகற்றப் பட்டாலென்ன? இந்த அகோர கொடும் பாபத்திற் குட்பட்டபெண்களின் நிலைமையைக் கண்டு துக்கிப்பார் உலகிலில்லையா?

சில ஊர்களில் தாசி வேசித் தொழிலை வர்த்தகமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். காரியாம்சத்தில் இதன் கொடுமைகளை, மாந்தர் உணர்ந்திலர். கோடான கோடி புருஷரின் ஆரோக்கியம் சீர்கெட்டுப் போவதையும் முதலாளி உலகம் உணரவில்லை. இவர்கள் திட்டத்தின் நோக்கு லாபமாதலால் இந்த லாபம் உலக சுகம் கெட்டு அதன் பயனாக வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. என்ன கொடுமை! இக்கொடுந் தொழிலால் 100க்கு 70 பேர், மேக நோயால் அவதிப்பட்டு அகால மரணமடைந்து வரும் சாட்சியைக் கண்டவர்கள் யார் தான் திகில் அடையார்கள்? இந்தக்கேட்டைவிட உலகில் எந்தக்கேடு அதிகமாக இருக்கின்றது? இந்த மகாபாதகத்தொழிலால் நம்மை நாம் கெடுத்துக்கொள்வதோடு, நமது சந்ததியாரையும் கெடுத்துக்கொள்வதென்றால் இந்தத்தனி உடைமை திட்டத்தின் பயங்கரத்தை என்னவென்று சொல்வது? இந்த திட்டத்தின் மூலமாக மனித குலம் பூண்டற்று விட்டாலும் விடும். இந்த திட்டத்தின் கொடுமையால் நமது தேசத்தின் பெண் மக்களை கேவலமாக மதித்து அவர்களில் பேதையரைதாசி வேசிகளாக்கத் துணிந்தோம். இந்தத்திட்டத்தைச் சேர்ந்த மதமும், மதாச்சாரியரும், வேதமும், வேதாந்தமும், நூலாசிரியரும், கவிஞரும் ஒன்று சேர்ந்து, பெண் மக்களை இகழ்ந்து அவமதித்துள்ளார். இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், "தூமகேதுக்களுக்கு" பெண்களை ஒப்பிட்டிருப்பதையும், "ஆலகால விஷத்தையும் நம்பலாம், ஆனால் சேலை கட்டிய மாதரை நம்பினால்" என்ற செய்யுட்களாலும் காணலாம்.

பொது உடைமைத் திட்டத்தின்படி இவ்வாழ்க்கை மானுஷீக வாழ்க்கையாகக்கருதப்படும். மனித வாழ்க்கை அன்பினால் எழும் வாழ்க்கையாதலால் அது அன்புக்கு விரோதமாக நடவா. ஆதலின், அன்பினால் பிணைக்கப்பட்ட ஸ்திரி, புருஷர், அந்த அன்பு இருக்கும் வரை கூடி வாழ்வார்கள். இவ்வித கூட்டுறவில் உண்டாகும், சந்ததியாரும் சுகித்து வாழ இடமுண்டு.

இந்த பொது திட்டத்தின்படி ஸ்திரீ புருஷாள் யாதொரு பொருளாதார வித்தியாசமின்றி வாழ வேண்டிவரும். இந்த திட்டத்தில் கல்வி கேள்விகளைப் பெறுவதிலும் இவ்விருதிறத்தாருக்கும் யாதொரு விகற்பமும் ஏற்பட இடமில்லை. ஸ்திரீபுருஷர்களுக்குள் வித்தியாசமில்லாமல் எத்தொழிலையும் புரியசந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படும். யாரும் சோம்பித்திரிந்து இவ்வாழ்க்கையை நடத்த முடியாதாதலால், கெட்ட செய்கைகளும் கெட்ட எண்ணங்களும் எழயிடமிரா. எவ்வித நற்றொழிலைப் புரிந்தாலும் தத்தம் சீவனை காப்பாற்ற வேண்டி வருதலால், துர்நடத்தைகளுக்கு சாகவாசம் ஏற்பட வழியில்லை. இவ்வித விதி விலக்குகளால் ஸ்திரீ புருஷ சம்பந்தம் நீதியுடனும்நெறியுடனும் பொதுவுடைமைத்திட்டத்தில்நடத்தப்படும். உலகிலுள்ளபலதேசங்களில்ஒன்றுதான்பொதுவுடைமையைக்கையாண்டு, அதில் நிகழ வேண்டிய ஸ்திரீ புருஷ சம்பந்தத்தையும் நிர்வகித்து வருகின்றது. அதனை இன்னொருமுறை எழுதுவோம்.

தேர்தல் வந்து விட்டது
பார்ப்பன சூக்ஷிக்கும்
காங்கிரஸ் சூக்ஷிக்கும்
ஏமாந்து விடாதீர்கள்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

டே இருந்தாலும், திருமணத்திற்கு முன்னர் ஒருவருக்கொருவர் தெரியாதபடி இழிநடத்தையுடையவராயிருந்திருந்தாலும், தம்பதிகளுள் யாரேனும் ஒருவர் பைத்தியம் கொண்டுவிட்டாலும், யாரேனும் ஒருவர் திருட்டுக் குற்றம் சாட்டப் பட்டு எங்கேனும் ஓடி விட்டாலும், அல்லது நாடோடியாய்த் திரிந்து வந்தாலும், மனைவியானவள் தன் வீட்டு வேலைகளைச் சரிவரக் கவனியாமல் மிகவும் அசட்டையாகவும், பிடிவாதமாகவும் இருந்தாலும்-இத்தகைய பல காரணங்களால் இரு தம்பதிகள் தம் மணத்தை ரத்து செய்து கொள்ள ஏதுவாகும். இன்னும் சில நாடுகளில் வாழ்நாள் முழுதும் சிறைச்சாலையில் இருக்க வேண்டுமென யாதானும் ஒருவர் தண்டனையளிக்கப்படுவரேல், சட்டத்தின் படி அதே நிமிடத்தில் அத்தம்பதிகளின் மணம் ரத்துசெய்யப் பட்டதாகும். மற்றும் திருட்டுக் குற்றத்திற்கும், இழிவான குற்றங்கட்கும் தண்டிக்கப்படினும் அவர் மணக்கட்டு விலக்கப்படும். சில மாகாணங்களில் நீதிபதியால் வழங்கப்படும் இம்முறைகளேயன்றி அந்நாட்டுச் சட்ட சபைகளும் இரு தம்பதிகளின் மணத்தை விடுதலைப் படுத்துகின்றன. இவ்வித மாகாணம் டிலாவேர் (Delavare) என்னும் நாட்டில் 1887வது ஆண்டிற்கு முன்னர் இருபது வருடங்களில் ஏற்பட்ட ரத்துக்களில் ஐந்தில் நான்கு பாகம் சட்ட சபை மூலமாய் அளிக்கப் பட்டவை. மற்றும் நம் நாட்டிலும், இங்கிலாந்திலும் உள்ளபடி அமெரிக்காவிலும் சட்ட விலக்கு (Tuciciai Separation) என்பதும் உண்டு. இது வரைக்கும் நாம் சுருக்கமாகக் கண்டவை ரத்துப்பெறுவதற்கு வேண்டிய மிகவும் முக்கியமான காரணங்களாகும். இனி பல மாகாணங்களிலும் மிக அற்பமான காரணங்களுக்கும் ரத்து அளிக்கப்படுகின்றது என்பதைக் காட்டும் பொருட்டு அமெரிக்கா அரசாங்கத்தின் அதிகாரிகளின் அறிக்கையிலிருந்து இரண்டொரு விஷயங்களைக் கூறுவோம். ஒரு மனைவி தன் கணவன் அவளது தங்கையைத் 'திருடி' என்று கூப்பிட்டதற்காகத் தன் மனமானது புண் பட்டதெனவும், அது காரணமாகத் தம் மணம் ரத்து செய்யப்படவேண்டுமெனவும் வேண்டி அவ்வாறே ரத்தும் பெற்றனள். மற்றொருவள் தன்னைத் தன் கணவன் கலியாணமான நாளிலிருந்து ஒரு முறையாவது வாகனங்களில் வைத்துக் கொண்டு வெளியே போனதில்லையெனவும் அது தனக்கு கூற முடியாத மனச் சஞ்சலத்தைத் தந்ததால் தம் மணம் ரத்து செய்யப் படவேண்டும் எனவும் கூறுகின்றாள். வேறொருவள் தன் புருடன் சரிவர ஸ்நானம் செய்து உடம்பைக்கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை எனவும் அதன் காரணத்தால்தனக்கு மிகப் பெரிய சஞ்சலம் ஏற்பட்டு விட்டதெனவும் முறையிடுகின்றாள். இன்னுமொருத்தி தன் கணவன் சதா காலமும் வேதத்திலிருந்து பாட்டுகளைக் கூறி எவ்விதம் மனைவி கணவன் சொற்படி கேட்டுப் பணிவாக நடந்து கொள்ளவேண்டுமென இடையறாது அறிவுறுத்திக் கொண்டே வருகின்றதாகவும் அதனால் தனக்கு நேரும் மனக்குழப்பம் அதிகம் எனவும் அழுது ரத்தைப் பெறுகின்றாள். கடைசியாக ஒருத்தி தன் புருடன் தினந்தோறும் இரவு மணி பத்தடித்த பின்னரே தன் வீட்டிற்குத் திரும்பி வருகின்றான் எனவும், அவ்வாறு தாமதமாகி வந்தும் அவளோடு முணுமுணுவென்று இரவு முழுவதும் தூங்க விடாமல் பேசிக்கொண்டே இருக்கின்றான் எனவும் கூறுகின்றாள். மற்றும் அவன் ஒரு மதுபானக் கடை வைத்திருப்பதாகவும் அவ்வாறு அவன் செய்வது தன் மனத்திற்குக் கஷ்டத்தை யளிக்கின்றது என்று அவள் கூறுவாளேல் அவன் அவள் அவ்வாறு தன்மீது தற்போது செய்யும் தொழிலுக்காகக் கோபித்துக் கொள்ளலாகாதெனவும் இன்னும் சில நாளில் அதை விடுத்து வேறு மேன்மையான தொழில் செய்ய ஏதுவாகும் எனவும் கூறுகின்றதாகவும் முறையிடுகின்றாள். இது ஒரு குற்றம் எனவும் அதற்காக தம் மணம் ரத்து செய்யப்பட வேண்டுமெனவும் வேண்டுகின்றாள் அப்பெண். மற்றும் எண்ணிறந்த பல ரத்துகள் இதே போன்ற கேவலமானதும் அற்பமானதுமான காரணங்களுக்காக (அல்லது காரணமின்மைக்காக) அளிக்கப் படுகின்றன.

விவாக ரத்து அளிக்கப்படும் காரணங்கள் மட்டுந்தான் அமெரிக்காவில் உள்ள அக்கிரமங்களுக்கு அடிப்படை என்று கூற முடியாது. அஃதோடு ரத்துப்பெறும் வழியும் மிகவும் விரும்பத் தகாதபடி கேவலமான நிலைமையிலுள்ளது. விவாக ரத்தையளிக்கும் நீதிபதிகள் நாட்டிலுள்ள சிறிய நியாயஸ்தலங்களில் உள்ளவர்கள்; அவர்களது சட்ட ஞானமோ அற்பமானது. ஒரு அமெரிக்கா தேசப் போறிஞர் (Mr. Newton Baker) கூறுவதைப் போல விவாக ரத்துப் பெறுவதானது அதையளிக்க ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு அதிகாரியின் மனப்பான்மை, இஷ்டம், குணம் இவைகளைப் பொறுத்ததாயிருக்கின்றது. இந்த விஷயத்தை நன்கு அறிந்த வழக்கறிஞர்கள், சர்வ சாதாரணமாகவும், எளிதாகவும் எந்த நீதிபதி ரத்தை அளிக்கக் கூடியவரோ அவர் முறை வரும் வரையில் விவாகரத்து வழக்கு விசாரணையை ஒத்தி வைத்துக் கொண்டே செல்லும் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டு வருகின்றனர். நீதிபதிகளில் அனேகர் விவாக ரத்து வழக்குகளில் மனித சமூகத்திற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருக்கும் விஷயம் அபாயத்திலிருக்கின்றது அதனால் மனம் போனபடி கையாளுதல் பெருந்தவறு என்னும் உயரிய உண்மையை உணராதிருப்பது மிகவும் வருந்தத் தக்கதே. அவர்கள் தம்பதிகளுக்காகவோ அல்லது வழக்கறிஞரின் தாட்சண்யத்திற்காகவோ நியாயமான வழிதப்பிப் பல ரத்துக்களை அசட்டையாய் அளிப்பது தான் அமெரிக்காவில் உள்ள கேவலமான நிலைமைக்குக்காரணமெனமேலேகூறிய திரு. பேக்கர் அபிப்பிராயப்படுகின்றார்.

மற்றும், மணரத்து வேண்டுவோர் அவ்வுரிமையைப் பெறுவதற்குச் சில காலம் அப்பிரதேசத்தில் வசிக்க வேண்டுமென ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு சட்டம் உண்டு. அத்தகைய காலம் பலவிடங்களில் மிகவும் குறுகியதாயிருப்பதால் ஏராளமான மணரத்துக்கள் பெறஎளிதாகின்றது. இருதம்பதிகளில் ஒருவர் மணரத்து வேண்டுமெனக் கேட்டால் நீதி மன்றத்தார் மற்றொரு தம்பதிக்கு நோட்டீஸ் கொடுத்து அறிவிக்கும் முறை மிகவும் போதாததாகும். பத்திரிக்கைகளின் மூலம்வெளிப்படுத்தி மற்றொருவர் வந்து சேராவிடின் அவர் மணம் ரத்து செய்யப்பட்டு விடுகின்றது. சுருங்கக் கூறுமிடத்து இத்தகைய வழிகளால் ஏற்படும் நிலைமை என்னவென்றால் இரு தம்பதிகள் தம்முள் மனமொத்துத் தம் மணத்தை ரத்து செய்து கொள்ளலாம் என நிச்சயிப்பின் நீதிமன்றம் மிக எளிதாக அத்தகைய ரத்தை அங்கீகரித்து விடுகின்றது. வெளிப்படையாகவும் நோக்கவும் சட்டம் இத்தகைய நிலைக்குச் சம்மதப்பட்டதில்லையாயினும் அது அமுலில் கொண்டு வரப்படும் வழி இந்நிலைக்கே மக்களைக் கொண்டு செல்லுகின்றது. ஒரு தம்பதி ஒரு பிரதேசத்திற் சென்று சட்டம் வேண்டும்படியான மிகவும் சிறிய காலம் தங்கியிருந்து மற்றொரு தம்பதியில்லாவிடினும் தம் மணத்தை ரத்து செய்துகொள்ளும்படியான இப்பழக்கம் மிகக்கொடியதாக இன்றும் வழங்கிவருகின்றது. அமெரிக்காவில், இவ்வாறு ஒருமாகாணத்தில் செய்யப்பட்ட ரத்து பொதுவாக மற்றெல்லா மாகாணங்களிலும் செல்லும் பான்மையதாகும். ஆகவே நாம் இதுவரைக்கும் சுருக்கமாகக் கண்டது என்னெனின் மணரத்துச்சட்டம் மாகாணத்துக்கொன்று என்றிருப்பதும், மணரத்து அளிக்கப்படும் காரணங்கள் எண்ணிறந்தனவும், அற்ப குணத்தனவும் ஆக இருத்தலும் அவ்வாறு மணரத்துப்பெற வழக்கத்திலிருக்கும் சட்ட வழி (Proceed:vu) முதலியன மிகவும் கேவலமானவையாகவும், நெகிழ்ச்சியுடையனவாகவும் இருத்தலும் ஆகிய மூன்று முக்கிய காரணங்களால் தான் அமெரிக்காவில் உள்ள மணரத்துச்சட்டத்தின் நிலையும் முறையும் இவ்வளவு இழிவானதாகவுள்ளது என்னும் பெரிய உண்மையேயாகும்.

நம் தேசத்தில் இவ்விதமான மூன்று குற்றங்களும் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளுதல் மிகஎளிது. அவ்வாறு நாம் இவைகட்கிடங்கொடாதபடி சட்டம் முதலியவற்றையமைத்துக்கொள்ளுவோமேயானால் அமெரிக்காவில் நேரும் குற்றங்கள் இந்தியாவில் உண்டாக இடம் இராது என்பது திண்ணம். எனெனில் இப்பொழுதும்கூட விவாகம் முதலிய விஷயங்கள் இந்திய சட்டசபையின் கைவசம் இருக்கின்றதேயொழிய ஒவ்வொருமாகாண சட்டசபையினிடம் இல்லை. இது ஒரு பெரிய நன்மையேயாகும், இந்தியா முழுமைக்கும் (இந்துக்களுக்கு) ஒரே மணரத்துச்சட்டம் ஏற்பட்டு அது விஷயத்தில் ஒரு குழப்பமும், குற்றமும் ஏற்படஏதுவிராது. அவ்வப்போது விவாஹரத்துச்சட்டத்தை மாற்றவும் நீக்கவும் மிக எளிதாகவும் இருக்கும். இரண்டாவது ஒரே சட்டம் ஏற்பட்ட மாத்திரத்தில் அதையமுலுக்குக்கொண்டுவருமுறையும் வழங்கப்படும் வழியும் மிகச்சரியானதாகவும் நெகிழ்ச்சியில்லாததாகவும் ஏற்பட அளவற்ற வசதியுண்டு. இங்கிலாந்து முதலியதேசங்களில் இருப்பதைப் போல அச்சட்டம் வழங்கப்படலாம்; மூன்றாவது நாம் அமெரிக்காவில் காணும் அற்பமானவையும், அக்கிரமமானவையுமான காரணங்கள் பலவற்றை அறவே ஒழித்து மிகவும் முக்கியமும் மேன்மையும் இன்றியமையாமையும் உடைய தலைசிறந்த நியாயமுற்றகாரணங்களையே விவாக ரத்துவழக்க அவசியமானவை என வைத்துக்கொள்ளலாம். அவ்வாறு செய்தல் மிக எளிது. ஆகவே அமெரிக்காவில் காணும் குறைகளையும் குற்றங்களையும் அறவேயொழித்து விவாஹவிடுதலைச்சட்டம் நம் நாட்டின் சமூக நிலைமைக்கு ஏற்ப அமைத்துக்கொள்ளுதல் மிகவும் எளிதாகும். அவ்வாறு செய்துகொள்வோமானால் அமெரிக்காவைப்போல் நாமும் ஒழுக்கத்திற்குறைவதற்கு ஒருக்காலும் இடமிராது என்பது திண்ணம் (தொடரும்)

மூவார் ஆதிதிராவிட சங்கம் (மலேயா)

23-10-31ல் மூவார் நந்தனர் மடம் கட்டிடத்தில் டாக்டர் A. B. C. துரை அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 500 பேர்கள் கூடியிருந்தனர். அது சமயம் அந்த மடத்தின் தலைவர் P. A. M. கஞ்சமலை மூர்த்திசுவாமி அவர்கள் "நமது நிலைமை" என்னும் விஷயமாக ஜாதி வேற்றுமையின் கொடுமையைப் பற்றியும், ஆதிதிராவிடர்களின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும், அவர்கள் கல்வியில் முன்னேறிச்சமஉரிமை பெறவேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசினார்கள். அதன் பின்னர் திரு. பொன்னம்பலம் (P. W. D.) அவர்களும், திரு. கியாஸ் அவர்களும், கல்வி, சுகாதாரம், ஒற்றுமை முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குச் சட்டம் செய்து, அதை அநுபோகத்திற்குக் கொண்டுவருவதைவிட, இப்பொழுது திரு. சண்முகமவர்கள் கொண்டுவரும் தீண்டாமையைப்பற்றின மசோதாவிற்கு, திரு. காந்தியும், அவர்கள் நண்பர்களும், காங்கிரசும் ஆதரவளித்து அந்த மசோதாவைச் சட்டமாக்கிவிட்டால் பின்னால் திரு. காந்தி வேலை சுலபமாகாதா? தீண்டாமை ஒழியவேண்டுமென்பது காங்கிரஸ் கொள்கையானால், திரு சண்முகம் கொண்டுபோகும் மசோதாவிற்கு காங்கிரஸ் ஆதரவளிப்பது தானே நியாயம். "ராஜீய சுதந்திரங்களை எல்லாரும் சமமாக அநுபவிக்கவேண்டும்" என்று வட்டமேஜை மகாநாட்டில் பிரிட்டிஷ் மந்திரிகள் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, திரு. சண்முகம் கொண்டுவரப்போகும் மசோதாவை வைதீகர்கள் எதிர்க்கிறார்கள். அவர்களைச் சுற்றிலுமுள்ள உயர்ந்த ஜாதி இந்துக்கள் தலையசைக்கிறார்கள். அதைப்பார்த்து உண்மை தெரிந்த படித்தவர்களும், பணக்காரர்களும் மௌனம் சாதிக்கிறார்கள். காங்கிரசோ பிரசாரத்திலிருக்கிறது. தேசியப் பத்திரிகைகளோ திரு காந்தியைப்புகழ்வதிலேயே யிருக்கின்றன. மத்தியில், பிரிட்டிஷ் மந்திரிகளிருக்கும் இந்தக் காலத்திலேயே, தீண்டாதார்கள் விஷயமாக சட்டசபைக்குப் போகும் மசோதாவின் பேரில், இத்தனை கலகமிருந்தால், "உயர்ந்த ஜாதி இந்துக்கள் கையில் சுயராஜ்ஜியத்தின் பொறுப்பு வந்துவிட்டால் தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்தில் சட்டம் செய்து தீண்டாமையின் கொடுமையைப்போக்கி விடுவேன்" என்று திரு. காந்தி சொல்லுவதை அம்பேட்காரும், சீனிவாசனும் நம்பமுடியுமா?

திரு. காந்திக்கு வயது ஆயிரமா? திரு. காந்திக்குப்பின், அவர் ஸ்தானத்திற்கு வருகிறவர்கள், வைதீகப் பற்றுநிறைந்திருக்கும் சட்டசபையில் செல்வாக்குப் பெறுவார்களா? செல்வாக்குப்பெற்றாலும், வைதீகர்களையும் மதப்பற்றுடையவர்களையும் மீறி, செல்வாக்குப் பலன் கொடுக்குமா? என்கிற விஷயங்களை யெல்லாம் ஆலோசித்துப்பார்க்கையில் தாழ்த்தப்பட்டவர்கள் இப்பொழுது தங்கள் பாத்தியதைகளை நிர்ணயம் செய்துகொள்ளவேண்டுமென்று நினைப்பது நியாயந்தானே! அதற்காக அவர்களை ஏன் குற்றம் சொல்லவேண்டும்?

அமிர்தம் எடுப்பதற்காக மகாமேருவை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் போட்டு சமுத்திரத்தைக் கடைந்தார்கள். அதில் கிடைத்த அமிர்தத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவதில் தர்க்கம் வந்தது. அந்த தர்க்கத்தைத் தீர்க்க விஷ்ணு வந்து, அமிர்தத்தைத் தேவர்களுக்கே கொடுத்துவிட்டார். விஷ்ணு மோசம் செய்து விடுவார் என்று தெரிந்த இரண்டு அசுரர்கள் தேவ வேஷத்துடன் தேவர்கள் பக்கம் உட்கார்ந்திருந்தார்கள். அதை விஷ்ணு தெரிந்து அமிர்த மெடுத்த சட்டுவத்தால் அவர்களை வெட்டினார்" என்கிற இதிகாச காவிய புராணங்களும், ஸ்தோத்திரப் பாடல்களும் விஷ்ணுவின் பெருமைகளையும், தேவர்களின் சிறப்புகளையும் தெரியப்படுத்துகின்றன. அவற்றை நாம் பக்தியோடு கொண்டாடுகிறோம். படித்தால் மோக்ஷமென்கிறோம். படிக்க வைத்து பார்ப்பனருக்குத் தானம் கொடுத்தால் புண்ணியமென்கிறோம். பூலோகத்தில் பொன் புத்திர பௌத்திரர்களோடு பொருந்தி வாழ்வோமென்கிறோம். அதை நம்பாவிட்டால் நாஸ்திகரென்கிறோம். அலட்சியப்படுத்தினால் பாவமென்கிறோம்.

அசுரர்களும், தேவர்களும் அமிர்தம் கடைந்தார்கள். வாசுகியின் தலைப்பக்கம் அசுரர்கள் பிடித்தார்கள். அமிர்தம் கடைவதில் கஷ்டபாகத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அசுரர்கள். அமிர்தம் கிடைத்த உடனே அசுரர்களை மோசம் செய்ய தேவர்கள் நினைத்தார்கள். தர்க்கம் நடந்தது. விஷ்ணு நியாயந் தீர்க்க வந்தார். அவரும தேவர்களுடன் சேர்ந்துகொண்டு அசுரர்களை மோசம் செய்தார். அந்த மோசத்தைத் தெரிந்த இரண்டு அசுரர்களையும் வெட்டினார். நமது தெய்வமும், தேவர்களும் மோசம், வஞ்சனை, துரோகம் செய்த கதைகளான இதிகாச புராணங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாருக்கும் தெரியாது. திரு. அம்பட்கார், திரு. சீனிவாசன் இவர்களுக்குத் தெரியும் போலிருக்கிறது. அதனால் தான் திரு. காந்தியையும், காங்கிரசையும் நம்பப் பயப்படுகிறார்கள் போலும்.

"கடவுள் பக்தியிலும், ஆத்மசக்தியிலும் நாம் பலமடையவேண்டும்" என்று திரு. காந்தி சொல்லுகிறார் என்று எழுதும் தேசியப் பத்திரிகைகள் உண்மையையும் சத்தியத்தையும் உலகத்திற்குச் சொல்லவேண்டாமா? உண்மையும் நியாயமும் இல்லாத தன்மையில் ஆத்மசக்தி வந்துவிடுமா? உண்மையும் நியாயமுமல்லவா கடவுள் பக்திக்கும் ஆன்மசக்திக்கும் அடிப்படையாகவிருக்கிறது.

சகோதரி M. சீதாலெட்சுமி
என்னும் கிரிஜாதேவி அவர்கள்
இயற்றிய

மோகனரஞ்சினி
அல்லது
சமூகத்தோற்றம்
என்னும் சீர்திருத்தநாவல்

எளிய தமிழ்! இனிய நடை!!
சிறந்தபொருள்!!!

பால்யமணம், ஆண்பெண், ஒருவருக்கொருவர் பிரியமில்லாது பெற்றோர் கட்டாயத்தின் மேல் நடத்தப்படும் மணங்களின் கதி, விதவைகளின் பரிதாபநிலை, பெண்களுக்கேற்படும் பலவிதமான துன்பங்கள், மதச் சட்டங்களின் கொடுமை, புரோகிதர்களின் வஞ்சகம், மடாதிபதி மோசம், ஜாதிக் கர்வம் முதலிய பற்பல விஷயங்கள் ஒவ்வொருவரையும் உண்மை மனிதராக்கும் சக்திவாய்ந்த இந்நாவலை சிறுவர் முதல் விருத்தர் வரையிலும் அவசியம் வாசிக்கவேண்டியது. சமூக முன்னேற்றங்கருதி 230 பக்கங்கள் கொண்ட அழகிய புத்தகத்தின் விலை ரூபாய் 1—0—0.

விலாசம்:—
சி. வ. பாலகிருஷ்ணன்,
88 அவதானம் பாப்பையர்தெரு
வேப்பேரி, சென்னை.

இரத்தவிர்த்தி, தேகபலம், தாதுபுஷ்டிக்கு

மனோரஞ்சித லேகியம்

தங்கபஸ்பம்

சேர்த்துச் சாப்பிடுங்கள்.

சகலவித உஷ்ணத்தையும், இரத்தக் கொதிப்பையும் அடக்கி நல்ல இரத்தத்தை ஏராளமாய்ப் பெருகித் தேக புஷ்டி, பலம், ஆண்மை வீரியவிர்த்தி, இந்திரிய விளைவு, தாதுக்கட்டு, போக இச்சை முதலியவைகளை உண்டுபண்ணி அடங்காத இன்பத்தைக் கொடுக்கும். திடகாத்திரம், மூளை பலம், ஞாபகசக்தி, அறிவு வளர்ச்சி, மனோவலிமையையும உண்டாக்கும்.

அதிக ருசிகரமுள்ளது. சிறுவர் முதல் ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். மாணாக்கர்களுக்கு மிகவும் அவசியமானது. எலும்பை உருக்கும உஷ்ணத்தை அடக்கி இரத்த விர்த்தியை உண்டுபண்ணி தேகத்தை வளர்க்கும். தனி லேகியமும் சாப்பிடலாம்.

30 வேளை லேகியம் ரூபா 3. தங்கபஸ்பம் 30 வேளை ரூபா 7.

நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி ஐய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—2—0
தனிப்பிரதி	ரூ.	0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி

கதரின் புரட்டை உணரவேண்டுமா?

அப்படியானல்

'கதரின் மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதில் கதரைப் பற்றி எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்களின் பிரசங்கமும், அதற்குத் திரு. பட்டாபி சீதாராமய்யா, திரு. என். எஸ். வரதாச்சாரி ஆகியவர்கள் எழுதிய மறுப்புகளும், அம்மறுப்புகளுக்கு. திரு ராமநாதன அவர்கள் எழுதிய பதில்களும் புள்ளி விபரங்களும் அடங்கியுள்ளன. இவற்றால் கதரின் பிரயோஜனமற்ற தன்மையையும், அதில் உள்ள மோசங்களையும் வெட்ட வெளிச்சமாகக் காணலாம்.

இதன் விலை அணு 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகிறவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று) சி. சுவாமி சிவநேசம், "சன்மார்க்கன்" பழனி.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு	0—8—0
டஜன் 1-க்கு	6—0—0
$8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ காப்பி 1-க்கு தபால் செலவுடன் ரூ.	1—4—0
வெளிநாட்டுக்கு ,,	1—8—0
உள். ஷை டஜன் 1-க்கு தபால்செலவுடன் ரூ.	15—0—0
$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு வெளிநாட்டுக்கு தபால் செலவுடன் ரூ.	0—13—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 0-11-6 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 13 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

குறைந்த விகிதத்திற்கு போட்டோபிடித்துக்கொடுக்கப்படும்.

பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதாரர்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கைவல்யஞானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து திகாற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்துதொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழவேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலைசிறந்ததாகும். இதன் விலை அணா 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0.

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0.

கதரில் உள்ளமூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை